REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805


# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னுகம், கர பங்குனி ௩. 16-3-52 ஞாயிறு (கார்த்தி ஆண்டு 83) | இதழ் 35

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார் வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள், மேசை, 'பொக்கெற்'கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ தமிழரசுக்கட்சி தமிழ் இராச்சியத்தையே அமைப்பதெனக் கங்கணங்கட்டி நிற்பதைப் பார்த்து மந்திரி பொன்னம்பலம் அவர்களே ஒன்றுங் கூறமுடியாத நிலையில் நிற்கின்ருர்.

# வில்லங்கமான அரசியல் நிலைமை

## வாக்காளர் அறியவேண்டிய அந்தரங்கம்

வடபகுதியில் நடைபெறவிருக்கும் புதிய பொதுத் தேர்தலைப்பற்றி அறிவதற்குக் கொழும்பிலுள்ளவர்கள் மிகுந்த ஆவலாக இருக்கின்றனர். ஈழகேசரி நிலையத்துக்குக் கிடைக்கும் பல கடிதங்களிலிருந்து இதனை நன்கு அறியமுடிகின்றது. முக்கியமாக யாழ்ப்பாணத் தொகுதியிற் போட்டியிட வருபவர்களைப்பற்றி அறியவே அனைவரும் தவியாய்த்தவிக்கின்றனர்.

புதிய பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் என்ன செய்யுமென்பதைப்பற்றிச் சென்ற வாரம் இங்கு எழுதியபோது, மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு இம்முறை ஏற்பட்டுள்ள வில்லங்கங்களைப் பற்றி இவ்வாரம் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தேன். ஆம், சென்ற முறை நடைபெற்ற புதிய தேர்தலின் போது தமிழ்க் காங்கிரஸ் தமிழ் மக்களிடையே மிகுந்த ஆதரவைப் பெற்றிருந்தது. 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்ற சொற்றொடர்கள் நாட்டிலே மந்திரம்போல வேலை செய்தன. ஏதோ இழந்த தமிழ் இராச்சியத்தைத் தமிழ்க் காங்கிரஸ் மீண்டும் பெற்றுத் தமிழ்த்தாயை அரியாசனத்தில் ஏற்றி வைக்கப்போகின்றதெனக் குருநகரிலுள்ள பெண்கள் தொடக்கம் காரவெட்டியிலுள்ள குழைந்தைகள் ஈருக நம்பினர். இத்தனைக்கும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தமிழர்களை ஏமாற்றுவதற்காக இப்படியான உறைப்பான பிரசாரத்தில் இறங்கவில்லை. ஏதோ வாய்ப்பான வழிவகைகளைக் கையாண்டு தமிழரின் அரசியற்றலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்காகவே அவர் நெருப்பாக வேலைசெய்தார். இதனுல் திரு. பொன்னம்பலம் அவர்கள் மாத்திரமன்றித் தமிழ்க்காங்கிரஸ் சார்பிற் போட்டியிட்ட அத்தனைபேரும் கொழுத்த வெற்றிபெற்றனர். தமிழ்க் காங்கிரசை ஆதரித்து நின்ற மக்களுக்கு இது மிகுந்த திருப்தியை உண்டாக்கியது. தமிழ்க்காங்கிரஸ் யூ. என். பி.

நமது அரசியல் நிருபர்

யுடன் ஒத்துழைக்க மாட்டாது என்ற நம்பிக்கையே இத்திருப்திக்குக் காரணமாகும்.

### தமிழ் இராச்சியம்

ஆனுல் திரு. பொன்னம்பலம் அவர்கள் வேறு ஒரு படத்தைப் போட்டிருந்தார். சோல்பெரித்திட்டம் நடைமுறைக்குவந்தபின்னர் சிங்களருடன் எதிர்த்து நிற்பதிற் பிரயோசனமில்லையென்பதை அவர் நன்கு அறிந்தபடியால், தமிழரின் நல்வாழ்வை முன்னிட்டு யூ. என். பி. யுடன் ஒத்துழைப்பதே சிறந்ததென முடிவுசெய்துவிட்டார். இதனை யாழ்ப்பாணத்திலுள்ள பெருவாரியான தமிழ்க் காங்கிரஸ்காரர்களால் அறியமுடியவில்லை. தமிழினம் மாண்டுமடிந்தாலும் தமிழ்க் காங்கிரஸ் யூ. என். பி. மந்திரி சபையில் இடம் பெறக்கூடாதென அவர்கள் பிடிவாதம் செய்தனர். திரு. பொன்னம்பலத்துக்கு இது ஒரேதலையிடியாகிக்கொண்டது. தேர்தலில் வெற்றிபெற்றவுடன் தமிழ்க் காங்கிரஸ் கௌரவமானமுறையில் யூ. என். பி. யுடன் சேர்ந்திருக்கலாம். அச்சந்தர்ப்பத்தை நழுவவிட்டபின்னர் அழையாவிருந்தினராகத் தமிழ்க் காங்கிரஸ் யூ. என். பி. யுடன் சேரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதுகாரணமாகக் காங்கேசந்துறைப் பிரதிநிதி திரு. செல்வநாயகம் அவர்களும் அவருடைய நண்பர்களும் தமிழ்க் காங்கிரஸிலிருந்து நீங்கித் தமிழரசுக் கட்சியை ஏற்படுத்தினர். யூ. என். பி.யை எதிர்ப்பவர்கள் அத்தனைபேரும் தமிழரசுக் கட்சியிடம் தஞ்சமடைந்தனர். திரு. பொன்னம்பலம் அவர்களின் ஐம்பதுக் கைம்பது என்ற திட்டத்தையும் தாண்டித் தமிழரசுக்கட்சி தமிழ் இராச்சியத்தையே அமைப்பதெனக் கங்கணங்கட்டி நிற்பதைப் பார்த்து மந்திரி பொன்னம்பலம் அவர்களே ஒன்றுங் கூறமுடியாத நிலையில் நிற்கின்ருர்.

### சர்வசங்கடமான நிலை

யாழ்ப்பாணத்திலுள்ள யூ. என். பி. அபிமானிகள் தாமும் சும்மா இருக்கவில்லை. புதிய பொதுத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் என்று சொல்லிக்கொண்டு மந்திரி பொன்னம்பலம் அவர்கள் அபேட்சகராக நிற்பது தர்மமாகாதெனவும் அவர் யூ. என். பி. கட்சியின் அபேட்சகராகவே முன்வர வேண்டுமெனவும் மேலிடத்துக்குத் தெரிவித்துள்ளனராம். ஆகவே, மந்திரி பொன்னம்பலம் அவர்கள் எத்தனையோ சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கின்றது. இதற்கிடையில்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)



ருஷியப் பாராளு மன்றத்தின் இருசபைகளின் கூட்டுக் கூட்டத்தில் 1952ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை நிதிமந்திரி யளித்தபோது ருஷியத் தலைமை அமைச்சரான ஸ்டாலின் அக் கூட்டத்தில் இருக்கவில்லை. சென்ற 6 ஆண்டுகளில் இந்த ஆண்டிற்றன் வரவு செலவுக் கூட்டத்தில் ஸ்டாலின் கலந்து கொள்ளவில்லை. மோஸ்கோவிற் பொதுமக்கள் முன்னிலையில் ஸ்டாலின் தோன்றியது லெனின் மரணநாளாகிய ஜனவரி 21-ந் திகதியேதான் 1951 கோடைகாலத்துக்குப் பின்னர் லெனின் நாள் தவிர வேறு எவ்விதப் பொதுவாழ்விலும் ஸ்டாலின்கலந்துகொள்ளவில்லை.

# கால்நடைகளைக் கைவிடாதீர்!

## வளம் தரும் உயிர்களை வதைப்பதா?

யாழ்ப்பாணம் 13.

பசுக் கொலையாகிய படுகொலையை ஆதரித்து அத்தகைய மாபாதகத்திற் பங்கெடுத்துக்கொள்வதை ஆறறிவு படைத்த மக்கள் ஒருவரும் விரும்பமாட்டார்கள். இக்கொடிய செயலின் நிமித்தம் தினசரி ஆயிரக்கணக்கான ஆடுகளும் மாடுகளும் வதைக்கப்படுகின்றன. இதனைக் கண்டித்துக் கால்நடைச் செல்வத்தை வளம் செய்யும் நோக்கத்துடன் கால்நடைகள் பாதுகாப்பு மகாநாடு ஒன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. குடா நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பிரமுகர்கள் பலர் சமுகமளித்தனர். வடபகுதிக் கூட்டுறவு மேற்பார்வைச் சபைச் செயலாளர் திரு. அ. அருளம்பலம் அவர்கள் தலைமை வகித்தார். மக்கள்வாழ்வும் உழவும் செழிப்புறுவதற்குத் துணைபுரியுங்கால்நடைகள் பாதுகாக்கப்படவேண்டியன வென்பதை வற்புறுத்திப் பலர் பேசினர். இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுட் சில வருமாறு:

1. வடமாகாணப் பகுதிகளிலிருந்து பசு, எருது, எருமை, ஆடு முதலிய கால்நடைகளை இறைச்சியின் பொருட்டும், ஏனைய தேவைகளின் பொருட்டும் வெளியிடங்களுக்குப் புகைவண்டி மூலமும், ஏனைய வாகனங்கள் மூலமும் வெளியேற்றுவதை யிட்டு இம்மகாநாடு வருந்துகின்றது. இவ்விதம் கால்நடைகளை வெளியேற்றுவதாற் கமக்காரர்கள் கால்நடைகளினுலான உதவிகளினுலும், அவற்றினுலான பசளைகளினுலும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் என்றும், பாலுணவு குறைந்து மக்களின் சுகாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறதென்றும் கால்நடைகளை வெளியேற்றும் வியாபாரத்தினுல் ஒரு கிராமத்திலிருந்து கால்நடைகளை இராக்காலங்களில் திருடி மற்றோர் கிராமத்திற்கு அப்புறப்படுத்தும் முயற்சியை ஒரு தொழிலாகச் சில தாகர்கள் கைக்கொள்கின்றார்கள் என்றும், இம் மகாநாடு அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆகையால் இவ்விதம் கால்நடைகளை எக்காரணம்பற்றியும் இறுதியாக வெளியேற்றுவதை உடனே முற்றாக அரசாங்கம் தடுக்கவேண்டும் என்றும், பொதுவாகக் கால்நடைகள் குறைந்துவருவதை உத்தேசித்து இறைச்சியின் பொருட்டுக் கொலை செய்யப்படுவதைத் தடுக்க (கட்டுப்படுத்த) வேண்டும் என்றும், அகில இலங்கைக் காந்திய சேவா சங்க ஆதரவிற் கூட்டப்பட்ட முதலாவது கால்நடைகள் பாதுகாப்பு மகாநாடு வற்புறுத்துகிறது.

2. நெல் விளைவுப் பிரதேசங்களில் இருந்து கால்நடைகளின் உணவுக்காக வைக்கோல் முதலியவற்றைப் புகைவண்டி மூலம் கமக்காரர் வருவிக்க அதிக செலவுகள் ஏற்படுகின்றன. இவற்றால் வைக்கோல் விலை யாழ்ப்பாணப் பகுதியில் மிக அதிகமாக இருக்கின்றது. ஆகையால் நெல்

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

# மதுவிலக்கு மகா சபை

## வட இலங்கை மக்களின் சங்கம்

யாழ்ப்பாணம், 13

நாடும் மக்களும் சீரும் சிறப்பு மெய்தி வாழ்வதற்கு மதுவிலக்கு இன்றியமையாதது. காந்தியடிகள் இதன் அவசியத்தைப்பற்றிப் பல சந்தர்ப்பங்களிற் கூறியிருப்பதுடன் மது அருந்துவதால் உண்டாகும் தீமைகளையும் எடுத்துரைத்துள்ளார்கள். உலகிலுள்ள பல்வேறு சமயங்களும் மது உண்பது மாபெரும் பாவம் என உபதேசிக்கின்றன. கள்ளுண்பவர் நஞ்சுண்பவரெனத் திருவள்ளுவர் ஐயந்திரிபறக் கூறிவிட்டார். சீர்திருத்தக்காரர்களும் சமய சீலர்களும் காலத்துக்குக் காலம் மதுவால் உண்டாகும் தீமைகளைக்கூறிவரும் காரணத்தாற்றான் மது அரக்கனின் 'வீறு' குறைந்துவரலாயிற்று.

சென்ற சனிக்கிழமை (8-3-52) வண்ணை வைத்தீஸ்வர விவேகாநந்த வித்தியாலய மண்டபத்திற் கூடிய வட இலங்கை மது விலக்கு மகாசபை கிராமங் கிராமமாக மது விலக்குப் பிரசாரம் செய்வதெனத் தீர்மானித்திருப்பது நற்கால அறிகுறியேயாகும். இக் கூட்டத்துக்கு டொக்டர் ஸி. குருசுவாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். மதுவிலக்கு இயக்கத்தில் அனுதாபமும் ஆர்வமும் உள்ள அன்பர்கள் பலர் கூடி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

பிரபல தென்னிந்திய நடன கலாவல்லி

குமாரி கமலா

அவர்களின் அற்புதமான பரத நாட்டியம்.

அவரது சகோதரி 8 வயது

ராதாவின்

நடனம் அருங்கலை விருந்து.

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில்

16-3-52 ஞாயிறு இரவு 7 மணி.

டிக்கற் விபரம்:

றிசேவ்ட்: ரூ. 10; 1-ம் வகுப்பு: ரூ. 7;
2-ம் வகுப்பு: ரூ. 5; 3-ம் வகுப்பு: ரூ. 3.

[4560]

# உயிர்வர்க்கங்களின் உற்பத்தி

## தசாவதாரத்தின் நுண்பொருள்

பிரமஸ்ரீ
சி. சுப்பிரமணியஐயர்

(முன் தொடர்ச்சி)

### நான்காம் பருவகாலம்

முதற் பனிக்காலம். இக்காலத்திற் பூமியிற் தாழ்ந்த குடாக்களும், வாவிகளும். ஆலாங்கட்டிக் குவியல்களுங் காணப்படலாயின. வடகோளமானது பனி செறிந்திருந்ததால் கடல்களும் தரைகளும் பனிக் கட்டிகளாலும் பனிமலைகளாலும் மூடப்பட்டன. பூர்வீக உஷ்ணத்தால் அல்லது நீரால் உண்டாக்கப்பட்ட பாறைகள் நூறு அடி கனமுள்ள பனிக்கட்டிகளால் சிதைக்கப்பட்டதால் அவைகளினிடையே ஜீவசேஷங்கள் ஏராளமாகக்காணப்பட்டன. வட ஐரோப்பா, கனடா (Canada), ஐக்கிய மாகாணம் (United States) ஆகிய இடங்களிலுள்ள மலைகள் நூறடி உயரத்துக்குப் பனிக்கட்டிகளால் மூடப்பட்டன. இவ்விடங்களில் அக்காலத்திற் சீவிப்பது எத்தன்மையுடையதாக இருந்திருக்குமென்பதை யூகிக்கத் தக்கதாகும்.

உஷ்ண வலயத்திற் சீவித்த பிராணிகளிற் சில இக் குளிருடைய இடங்களில் இறந்துவிடச் சில தெற்கு நோக்கிச் சென்றன. இக் குளிருடைய இடங்களிற் சீவிக்கத் தக்க சீதள வலய (Arctic) மிருகங்களே ஏராளமாகச் சீவிக்கத் தொடங்கின. மிதோஷ்ணவலயத்திலுள்ள இடங்களில் சீதளவலயப் பிரதேசத்திலுள்ள பாசிகளும், மிருகசேஷங்களுங் காணப்பட்டன. கலைமான்கள் சுவிற்சலன்ட்டுக்குத் தெற்குவரையும், துருவ நரிகள் ஸ்பெயினுக்குத் தெற்குவரையுங் காணப்பட்டன. இக்காலததிற்ருன் பட்சிகளும் குளிர்காலங்களிற் தங்களிருப்பிடங்களை விட்டு அனேகமைலுக்கப்பாலுள்ள உஷ்ண தேசங்களிற் சென்று சீவிக்கவும் (Hibernation) ஆரம்பித்தன. இத்தகைய செயலானது தற்போதும் நிகழ்ந்துகொண்டே வருகிறது.

ப்ளியஸ்ரோஸீன் (Pliestocene) உபகாலத்திற் பாறைகள் பனிப்படலங்களால் அரிக்கப்பட்டும், கோதப்பட்டுங் காணப்பட்டன. இவைகளுக்கிடையே வாள்போன்ற பற்களையுடைய புலிகளினதும், அடர்த்தியான மயிரையுடைய காண்டாமிருகங்களினதும், குகைகளிற் சீவிக்கும் கரடிகளினதும் சேஷங்கள் காணப்பட்டன. ஆனால் தற்போது இவைகள் குளிர் மிகுதியால் அழிந்துவிடவே குளிர் தேசத்திற் சீவிக்கததக்க மிருகங்களே சீவிக்கலாயின. இவை தற்கால மிருகங்களை யொப்பனவாகும்.

இப் பருவகால முடிவில் வாலில்லாக் குரங்குகளின் சேஷங்களுங் காணப்பட்டன. இவைகளுள் ஒருபகுதி தட்டையான மூக்குடையனவாகவும் (Flat-nosed monkies), மற்றைய பகுதி ஒடுங்கிய மூக்கு (Narrow nosed monkies) டையனவாகவுங் காணப்பட்டன. தட்டையான மூக்குடையவைகள் புதிய உலகமாகிய தென் அமெரிக்காவிலும், ஒடுங்கிய மூக்குடையவைகள் பழைய உலகமாகிய ஆபிரிக்கா முதலிய இடங்களிலுஞ் சீவிக்கத் தொடங்கின. ஒடுங்கிய மூக்குடைய குரங்கினமான துதற்காலத்திற் காணப்படுவதாகிய பபூன்ஸ் (Baboons) போன்ற வாலுடைய குரங்கினத்தைப் (Tailed Apes) போலவும், கிபன்ஸ் (Gibbons) போன்ற மனிதனையொத்த நெடிய கைகளையுடைய சிறிய குரங்கினத்தைப் (Small Anthropoids) போலவும், கொறிலா (Gorilla), சிம்பன்ஸீ (Chimpanzee), ஒருங் ஊற்ருங் Orang—Outang) போன்ற பெரிய குரங்கினத்தைப் (Large Anthropoids) போலவுங் காணப்படலாயின.

முன்னர் சொல்லப்பட்ட பிதகன்தொறப்பஸ் (Pithacanthropus), பலகன்கொறப்பஸ் (Palacanthropus) அழிந்துபோக மிருகத் தன்மையுடைய நியணடதற் மனிதன் (Neanderthat man) தோற்றப்படலாயினன். இவ் வர்க்கமும் அழிந்துபோக இவன்தொறப்பஸ் (Evanthropus) என்னும் ஓர்வகை மனிதன் தோற்றலாயினன். இவன்ஹோமோ ஸேர்ப்பியன்ஸ் (Harmoserpions) அல்லது புத்தியுள்ளமனிதன் என்று வழங்கப்படலாயினன். இப் பூர்வீக மனிதன் விவேகமும் பூரணமான மூளையையுமுடையவனுகக் காணப்பட்டான். இப் பூர்வீக மனிதன் தனது விவேகத்தால் மிருகங்களை யெதிர்த்து வெல்லத் தக்கவனுகவுங்காணப்பட்டான். இதுவே வாமனுவதாரகாலமாகும்.

வாமனுவதாரம்:— இது விவேகமும், பகுத்தறிவுமே உடற் பலத்தை வெல்லத்தக்கதெனபதைத் தெரிவிப்பதாகும். பருத்த உடலையும் பலத்தன்மையும் மட்டும் உடையவர்களைக்காட்டிலும் விவேகத்திற் சிறந்தவர்களே உலகத்திற் தலைமை வகித்தற்குத் தகுதியுடையாரென்ற உணர்ச்சியெழுந்த காலத்தையும் இது காட்டுவதாகும்.

### சரித்திரகாலத்திற்கு முந்தியகாலம்

இயோலிதிக் (Eolithic) உப்காலத்தில் காணப்பட்ட பூர்வீக கற்கால (Old Stone Age) மனிதன் துணையற்றவனுகவும் தற்பாதுகாப்பற்றவனுகவுங் காணப்பட்டான். தனக்கு உணவு கொடுக்கும் மிருகங்கள் தன்னை யெதிர்க்கும்பொழுது அவற்றைத் தனது பெலததினுலும், கெட்டித்தனத்தினுலும் எதிர்த்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வானுயினுன். அவன் பழங்களையும், விதைகளையும், மரங்களிலும், பொந்துகளிலும், குகைகளிலும் சீவித்த சிறு மிருகங்களையுமே தனக்கு உணவாகக் கொண்டான். இம் மனிதன் மூர்க்கமுடையவனுகவும், வன்மையுடையவனுகவும், மனுஷத்தன்மை, இரக்கம், சகோதரத்துவம் ஆகிய குணங்களற்றவனுகவுங் காணப்பட்டான். இவன் மாணத்தின் வாயிலில் எப்பொழுதும் சீவிப்பவனுனுன்.

பலியோலிதிக் (Paliolithic) உபகாலத்தில் புலி, கரடி, சிங்கம், காட்டா, நீர்நாய் போன்ற மிருகங்கள் ஏராளமாகச் சீவி

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)


சகல பயிர்களுக்கு
CCC பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனுக

நாங்கள்
C C C
கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிருேம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் CCC கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4538]

★ 'பழமொழி இலக்கியம்' என்ற இப் பரந்த விஷயத்தை "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு" என்ற வகையிற் பதம் பார்த்தோம். இந்த வகையில் இன்னும் ஆராய்ச்சி செய்தால் அதிக பலன் கிட்டும்.

# பழமொழி இலக்கியம்

## சமணர் போற்றிப் பாதுகாத்தனர்

— 3 —

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

என்பது கற்பைப்பற்றிக் கூறும் திருக்குறள். இதே கருத்தை வலியுறுத்துவது பின்வரும் வெண்பா:

"நிறையான் மிகுகல்லா
நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்தல்
ஆகா — அறைபோ?
வருந்த வலிதினின்
யாப்பினும் நாய்வால்
திருத்துதல் என்றுமோ இல்"

'நாய்வால் திருந்துதல் இல்' என்பது பழமொழி. திருந்துதல் — நேராதல். பெண்கள் தம்மைத்தாமே கற்பினாற் காத்துக்கொள்ளவேண்டும். அதுவே மற்றெந்தக் காவலிலும் கூடிய பலனைத்தரும் என்பது இதன் சாரம்.

நாயைக் கண்டாற் கல்லெடுத்து எறிவது நமது பழைய பாரம்பரைப் பழக்கங்களில் ஒன்று. மனிதகுலம் உற்பத்தியான ஆரம்ப காலத்தில், வனவிலங்குகளில் இருந்து தப்புவதற்கு நம் மூதாதைகள் கல்லையே ஓர் இயற்கை ஆயுதமாகக் கொண்டிருந்தனர். அந்தப் பழக்க வாசனை தான் இப்பொழுதும் நாய் விஷயத்தில் அநாவசியமாகக் கையாளப்படுகிறதுபோலும்! என்றாலும், நாயைக்காணும் போது கல்லும், கல்லைக் காணும்போது நாயும் அகப்படுவதில்லை. வாழ்க்கையில் இப்படி ஒன்றிருந்தால் மற்றொன்று இல்லாமற் போகும் அவல நிலைமை அடிக்கடி வருவதுண்டு. வாழ்நாள் முழுவதும் மனத்தாற் கூட நினைக்காதவர்கள், மரணப்படுக்கையிற் கிடக்கும் போது தருமஞ் செய்ய முற்படின் அவர்களின் தருமததை ஏற்பவர்கள் இன்மையால், அது வீணாகி விடுவதும் உண்டு. இதைப் பின்வரும் பாடல் அறிவுறுத்துகிறது:

"மாய்வதன் முன்னே
வலைகப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார்
பின்னை — வழிநினைந்து
நோய்காண் பொழுதில்
அறஞ்செய்வார்க் காணமை
நாய்காணின் கற்காணு ஆறு"

'நாய் காணின் கற்காணு ஆறு' என்பது இங்கு எடுத்தாளப்பட்ட பழமொழி. அறத்தைப் பொருள் பெற்ற பொழுதே செய்யவேண்டும் என்பது இதனால் வற்புறுத்தப்படும் நீதி.

### சமணர்கள் பணி

இதுபோலவே நூல்முழுவதையும் ஆராய்ந்தால், 'ஆயிரங்காக்கைக்கு ஒரு கல்' 'இறைத்தோறும் ஊறுங்கிணறு' 'உமிக்குற்றிக் கைவருந்துவார்' 'குன்றின்மேலிட்ட விளக்கு' 'தனிமரம் காடாதலில்லை' 'யானையால் யானை யாத்தற்று', 'முறைமைக்கு மூப்பிளமையில்', 'தானே யாடும் பேய் பறை கேட்டாற் பாய்ந்தாடும்', 'நுணலுந் தன் வாயாற் கெடும்' என்பது முதலிய பழமொழிகளை யெல்லாம் தக்க வழியிற் பயன்படுத்தி இருப்பது தெரியவரும்.

அக்காலச் சமணர்கள் பழமொழிகளைப் பெரிதும் போற்றிப் பாதுகாத்தார்கள் என்பதற்கு நாலடியார் முதலிய

**க. இ. சரவணமுத்து**

நூல்கள் சாட்சியாகும். 'ஒருவர் பொறை இருவர் நட்பு' 'தட்டாமற் செல்லாது உளி' 'தேவர் தின்னினும் வேம்பு கைக்கும்' என்பது முதலிய பழமொழிகள் நாலடியாரில் எடுத்தாளப்பட்டுள்ளன.

சமண சமயத்திற் சேர்ந்திருந்து பின்னர் சைவத்துக்கு மீண்ட அப்பர் சுவாமிகளின் திருவாரூர்ப் பதிகப் பாடல் ஒவ்வொன்றிலும் 'கனி இருக்கக் காய் கவர்தல்' 'முயல் விட்டுக் காக்கை பின் போதல்' முதலிய பழமொழிகளில் ஒவ்வொன்று கையாளப்பட்டுள்ளன.

"தண்டலையார் சதகம்" போன்ற பிற்காலப் பிரபந்த இலக்கியங்களிலும் 'காற்றுள்ளபோதே தூற்று' 'பனங்காட்டுநரி சலசலப்புக் கஞ்சாது' 'எட்டி பழுத்தும் ஈயாதார் வாழ்ந்தும் பயனில்லை' ஆதிய பல பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. "நாய்வாலை அளவெடுத்துப் பெருக்கித் தீட்டி நற்றமிழை எழுத வெழுத்தாணியாமோ" எனவரும் விவேகசிந்தாமணிப் பாட்டில் 'நாய்வாலை நிமித்த முடியாது' என்ற பழமொழி கையாளப்பட்டிருக்கிறது.

* * *

பாரதம்—சூதுபோர்ச் சருக்கத்தில் பாண்டவர் சிறப்பை வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசும் கன்னனைப்பற்றி 'அறஞ் செறி தானவண்மை அளவிலா தளித்து நாளும், பறஞ் சுவர்க் கோலஞ் செய்வான்" என்று கவி கூற்றாக வரும் பகுதியில் 'உட்சுவர் இருக்கப் புறச்சுவர் பூசுவார்' என்ற பழமொழிக்கருத்துப் புகுத்தப்பட்டிருக்கிறது.

பாண்டவரைச் சூதினாலே தோற்கடிக்குஞ் சதித்திட்டத்தோடு துரியோதனனுதியர் அனுப்பிய அழைப்பைத் தருமன் தட்டாமல் ஏற்றுக்கொண்டதுபற்றி விதுரன் வினவும்போது "என்கருத்தினாற் பெறுவதென்? விதியினை யாவரே வெல்வார்?" என அவன் கூறுஞ் சமாதானத்தில் 'விதியை வெல்ல வல்லார் யார்?' என்ற பழமொழி புகுத்தப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்—பாண்டவர் மந்திராலோசனை நடத்துங் கட்டம்: குருநாட்டிற் பாதி — ஐந்தூர் — ஐந்து வீடு—என்ற விதமான தருமனின் குறைந்த பட்சக் கோரிக்கைத் திட்டப்படி கிருஷ்ணன் சமாதானம் பேசிச் செல்வது பாண்டவர் வீரத்துக்கும்—சபதத்திற்கும் கேடு வருவிக்கும் என்று சினந்து கூறும் வீமனுக்குத் தருமன் சொல்லுஞ் சமாதானத்தில் 'குற்றம் பார்க்கில் சுற்றமில்லை' என்ற பழமொழி கலந்து வருகிறது.

"பொன்னுருக் கிரியினுன்
போனும்பொறைவேந்தன்
புகன்றவெல்லாஞ்
சொன்னும் அவன்கேளான்
விதிவலியாற் கெடுமதிகள்
தோன்றுதன்றே
எக்நாளும் உவர்நிலத்தில்
நெல்முளை வித்திடினும்
விளைவெய்திடாது
பன்னகந் தனக்கமிர்தம்
கொடுத்தாலும் விடமொழியப்
பயன் கொடாதே"

என்று அருச்சுனன் கூற்றாகவரும் பகுதியில் "கேடு வரும் முன்னே மதிகெட்டு வரும்;" "உவர் நிலத்தில் நெல்விளையாது"! பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தாலும் அது விஷத்தையே கக்கும்" எனும் பழமொழிகள் கலந்துள்ளன. இன்னொரு பாடலில் "தான் அறியாதவன் பிறர் அறிவித்தால் அறிவானோ?" என்ற பழமொழி வருகிறது.

### பேச்சு வழக்கில்

இதுவரை செய்யுள் வழக்கிற் கலந்துள்ள பழமொழிகளைப்பற்றி இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பார்த்தோம். இனிப் பேச்சு வழக்கில் உள்ள பழமொழிகளைக் கவனிப்போம்.

தமிழ்நாட்டு எந்த மூலை முடுக்கிலும் சர்வவியாபியான கடவுளைப் போலப் பழமொழிகள் உலாவவே செய்கின்றன. தமிழரின் ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் 'கூழுக்குப் பயறு போட்டதுபோலப்' பழமொழிகளும் பயின்று வருவதுண்டு. சாதாரணமாக ஒன்றைப்பற்றிக் கூறுவதிலும் அந்தச் சந்தர்ப்பத்தில் அதற்குத்தகுதியான ஒரு பழமொழியைக் கலந்து பேசினுல், கேட்போரின் மனதிற் கிளர்ச்சியையும் தெளிவையும் ஏற்படுத்துவ

[தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க]

# மங்கையர் முன்னேற்றம்

— பண்டிதர் கா. மாணிக்கம் —

மங்கையர் நாமொன்று கூடிடுவோ மிந்த
மாநிலந் தன்னையே நோக்கிடு வோம்
தங்கையர் போலவே வாழ்ந்திடு வோம்பணி
சாலவு மேயிங்கு செய்திடு வோம்.

நெஞ்சகம் கோணுது நின்றிடு வோம்கல்வி
நித்தமு மேகற்றுத் தேறிடு வோம்
அஞ்சுங்கு ணத்தைய கற்றிடு வோமிங்கு
ஆதர வாகந டந்திடு வோம்,

எக்கலை தன்னையும் கற்றிடு வோமிங்கு
என்ன*வி னையையும் செய்திடு வோம்
இத்தலம் தன்னிலே யாவரும் மெச்சிட
இன்னல்கள் தம்மைக்க டந்திடு வோம்.

வாழும்வ கையற்ற தன்மையி னுலெங்கள்
வாழ்வுஅ டிமையை யொத்தது வே
மேலும்உ ரிமைய னைத்தையும் பெற்றிட
வேண்டுமென்றேதிட்டம்செய்திடுவோம்.

பெற்றவர் எங்களின் வாழ்வைவி ரும்பியே
‡பொற்குவை தன்னை வ்ழங்கின ரே
உற்றவ ழக்கமொ ழிந்திட வேயிங்கு
ஒன்றுதி ரண்டுமு யன்றிடு வோம்.

மேல்வரும் காலத்தை நோக்கிடு வோம்வீர
மக்களை நாமுமே ஈன்றிடு வோம்
வாழ்வுசி றக்கவ ழியிடு வோமினி
வாட்டமிங் கேதென்று பாடிடு வோம்.

வள்ளுவர் காட்டிய இல்லறம் பேணுவம்
வாழ்வுத மிழென்று காட்டிடு வோம்
தள்ளிடு வோம்மேலை நாகரீக வாழ்வைச்
சாற்றிடு வோமது தீமையென் றே.

கற்புநெ றியைக்க டைப்பிடிப் போம்கவி
பாடுந்தி றமையைக் கூட்டிடு வோம்
அற்புதன் தாழிணைப் போற்றிடு வோமிங்கு
அன்புசி றந்திட வாழ்ந்திடு வோம்,

* முயற்சியையும். ‡ சீதனம்.

# செந்தமிழ்ப் பூங்கா

**தமிழ்ப் புலவர்**
**மு. இரத்தினேசுவர ஐயர்**

அகப்பொருள் புறப்பொருள் என்று சங்க இலக்கியங்களை வகுப்பர். இந்நூல்கள் நானிலமக்களின் ஒழுக்கவழக்கங்களை நமக்கு நல்குவன. நாம் அந்நெறிகளைப் பின்பற்றி நடப்பதால் நன்மையே விளையும். அன்பு நெறியில் ஆணும் பெண்ணும் கூடி இன்புற்று வாழ்வதையே அகவொழுக்காறு என்பர். இந்த அரிய வாழ்க்கைப் பேறுதிய வீடு பேற்றையும், அதற்குக் கருவியாகிய அறமும், அதற்குச் சாதனமாகிய பொருளீட்டலும், அவ்வாழ்க்கைக்கு இடையூறு எய்துங்கால் போர் செய்து வென்றிகோடலுமென்பன புறப்பொருளின்பாற் பட்டனவாகும்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு முதலியன நன்கு பயிலும் மாணவர் தமிழின் பண்பாட்டை நனியுணர்வர். கணக்கு, நூல் என்னும் பொருளில் வழங்குவர்.

அகநானூற்றில் தலைவனியல் நன்கு கூறப்பட்டுளது. தலைவன் கல்வியறிவு ஒழுக்கங்களில் சிறந்தவன்; பரம்பரைச் செல்வன். இவனுடைய நட்பு வளர்பிறை போன்று வர வரச் செறிந்து வளரும் பண்பிற்று. துவரா நட்பின் இருதலைப் புள்ளின் ஓருயிரன்னதாக மனமும் உயிரும் பிரியா இயல்பினர்.

"உயிர்கலக் தொன்றிய
தொன்றுபடு நட்பின்
செயிர்தீர் நெஞ்சமொடு
செறித்தோர்"

என்பதுநோக்குக. தலைவியரின் மாண்புகளும் பல. தொல்காப்பியர் கூறுவது:—

"கற்பும் காமமும்
நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும்
நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும்
சுற்றமும் ஓம்பலும்."

என்று தொடர்ந்து கூறி, முற்றமொழிய வரம்பிலதாகிப் பல்கலின் பிறவும் என்றமை பாராட்டற் குரியதாம்.

கற்பு என்பது தலைவன் தலைவியர் இருவருக்கும் உரியதே. அக்கற்பை உயிரினும் உயர்ந்ததாகக் கொண்டு நடப்பவள் தலைவியே. இத்தகைய தலைவியின் கற்புத்தானும், தன்னையுடைய தலைவிக்கு அறம், பொருள், இன்பம் என்பவற்றுடன் மறுமையின் வீட்டையும் பயப்பமுன்னிற்பது அத்தலைவியரைப் புரந்து வாழ்வார்க்கு ஆக்கந்தரும் பெரும்பேறுன கற்பு. அவர்க்குத் தீங்கிழைப்புழி அக்கற்புக் கேடுதரும் பெருமறப்படையாகும் என்றுணர்க. இக்கடவுட் கற்பையே எண்ணருநலஞ்சால் கண்ணகி முதலினோர்பாற் கண்டோம். இக்கடவுட் கற்புக் கடவுளரையும் அஞ்சுவிக்கும் பண்பினது. தங்கள் நாயகரில் தெய்வம் தவம் பிற இன்றென மதிக்கும் நங்கைமாரால் நாடு சிறந்தது; சமயம் பொலிந்தது; தமிழுந் தழைத்தது. பொய்யுங் களவும் தலைவிரித்தாட ஆரம்பித்தன. நூல் வரம்பு நோக்கார் பலர் பகினர். கரணவழக்குமுங்காணப்பட்டது. சமாதான புத்தியோடு, அகப்பொருள், புறப்பொருள் நூல்களையும், திருவள்ளுவர் திருக்குறளையும் படித்தால் உண்மை தோன்றும். சஞ்சலவுணர்ச்சி என்றும் அசைந்த வாழ்வையே காட்டும். ஆகவே, செந்தமிழ்ப் பூங்காவுட்புக்கு உலவத் தமிழன்பர்கள் முன் வருவார்களாக.

புத்தகங்கள். பத்திரிகைகள். விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

1930

# ஈழகேசரி

சுன்னுகம், கர ஹு பங்குனி ௩
— காந்தி ஆண்டு 83 —
பேசும் தந்தி இல. 805

## பசுக்கொலை

இந்நாட்களிற் கொடிய செயல்கள் நம் நாட்டில் அதிகரித்துக்கொண்டு வருவதைக் கண்டு யாவர் நெஞ்சந்தான் திடுக்காட்டம் அடையாதிருக்கும்? நாள்தோறும் நூற்றுக்கணக்கான காளைமாடுகளும் பசுக்களும் புகையிரத மூலமாகக் கொழும்பு நகர்க்கு அனுப்பப்படுவது யாழ்ப்பாணப் பகுதியிற் சாதாரண காட்சியாகிவிட்டது. பசுக்கொலையைப் பெரும்பாதகமாகக் கண்டித்து விலக்கும் சைவர்களாகும் தமிழர்கள் வாழும் வட இலங்கையிலிருந்து, இறைச்சிக்காக இவ்வளவு தொகையாக மாடுகள் கொழும்புக்கு அனுப்பப்படின், ஏனைய மாகாணங்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லையே. ஊனையருந்தி ஊனைப் பெருக்குவோர் தொகை பன்மடங்கு பெருகிவிட்டதற்கு இது அடையாளமாகும். மக்களின் நல்வாழ்க்கைக்குப் பண்டுதொட்டு மிக்க ஆதாரமாக இருந்துவரும்பசுக்களைச் சிறிதேனும் இரக்கமின்றிக் கொல்வோரும், அதன் ஊனைப் புசிப்போரும் அச்செயலுக்குச் சாதகமாக நிற்போரும் எவ்வளவு கொடிய பாவத்துக்கு ஆளாகின்றுர்கள். இதை நம்மவர் நன்கு உணர்கின்றுரில்லை. சமய சன்மார்க்க அறிவு குன்றி, வன்கண்மையும் அக்கிரமச் செயல்களும் எவ்வளவு நாட்டில் வேரூன்றிவிட்டனவென்பது இதிலிருந்து அறியலாகும்.

நம் நாட்டிலுள்ள கால்நடைகளெல்லாம் இறைச்சிக்காக விற்கப்படின் சீவநாடியாகும் உழவுத் தொழிலின் கதி யாது? வயல்களை உழுதற்கும், அவைகட்கு வேண்டிய பசளைகளைப் பெறுதற்கும் வேறு வழியுண்டாவென்று கேட்கின்றேம். நாட்டின் பொருளாதார நிலையின் உறுதிப்பாடானது, கால்நடைகளை இனிது காப்பாற்றுவதிலேயும் தங்கியிருக்கின்றது. பணவாஞ்சையால் தம்மிடமுள்ள காளைகளையும் பசுக்களையும் பொதுமக்கள் விலைக்கு விற்றுவிடின், தாம் செல்வராய் வந்துவிடலாமென்று எண்ணுகின்றனர் போலும். இது எப்படிப் பொருந்துமோ? வறுமையும் உணவுத் தட்டுப்பாடும் மேம்மேலும் நம் நாட்டினை வருத்த இவர்கள் வழிகளை உண்டாக்கி விடுகின்றனரென்றே சொல்லவேண்டும். சிறந்தவுணவாகும் பாலினைக் கொடுக்கும் பசுக்களை, வயல்களுக்கு வேண்டிய பசளைகளைப் போதியளவு அளித்துவரும் மாடுகளை, உழவு தொழிற்கு இன்றியமையாத காளைகளை வன்கண்ணராம் கொலைஞரிடம் ஒப்புவிக்க நம்மவர் துணிந்துவிட்டனரே!

பழைய நாகரிகமும் பண்பாடும் நிறைந்த தமிழர்களாகும் நாம், இவ் இழிதொழிலில் ஈடுபடுதல் பெரிய அவமானத்துக்கு இடமாகாதா? இனியாவது விழித்தெழுந்து இக் கொடிய செயல் நாட்டில் ஏற்படாது பாதுகாக்க வேண்டாமா? எமக்கென்ன என்று நாம் வாளாவிருப்பின் கடைசியில் வரவிருக்கும் பெருந் தீமை யாவரையும் ஒருங்கே விழுங்கி விடாது போமா? நன்கு ஊன்றி ஆலோசித்துப் பார்ப்பின் நம் நாடு பாழான நிலையை நோக்கிச் செல்கின்றதென்றே கூற வேண்டும். அறியாமையில் அமிழ்ந்திய மக்கள் செய்யும் இந்த இழிந்த செயலை, நாகரிகம் பன்மடங்கு முதிர்ச்சியடைந்த இக்காலத்திற் பகிரங்கமாகச் செய்யும் நிலை ஏற்பட்டதே என்று இரங்குகின்றேம்.

எனவே, இலங்கை யரசினர் இவ்விஷயமாகக் கட்டுப்பாடுகள் இயற்றி இக் கொடுமை பெருகிச் செல்லாது தடுக்க வேண்டும். இலங்கை வாழ் மக்களாயுள்ள தமிழர், சிங்களர் ஆகிய இரு சாதியினர்க்கும் பண்டுதொட்டுப் பரம்பரையாக இந்த இழிந்த தொழில் முற்றுக விலக்கப்பட்டதொன்ருகும். அத்துடன் அரசினர் அரிது முயன்றுவரும் கமவிருத்திக்கும் கால்நடைகளைக் காப்பாற்றல் மிகவும் இன்றியமையாத தொன்று. பசுக்கொலை நினைத்தபடி நடந்தேற இடங்கொடுப்பின் காலகதியில் நம் நாட்டின் கதி என்னவாகுமென்று நாம் கூறவேண்டியதில்லை. பலாமரங்கள், பனை மரங்கள் தறிப்பதைக் கட்டுப்படுத்தும் நம் இலங்கையரசினர், கொலையின்பொருட்டு, இறைச்சிக்காக, மாடுகள் விற்கப்படுவதை ஏன் தடுக்கக்கூடாது? இந்தியாவில் இவ் விஷயமாக அரசினர் அளவு கடந்த பாதுகாப்புக்களை மேற்கொள்கின்றனர். கிராமங்களில் வசிக்கும் ஏழைக் கமக்காரரின் சீவியத்துக்கு உயிராதாரமாகவுள்ளதுஇக் கால்நடைகளல்லவா? எனவே இவைகள் அழிந்துபோக விடுவது எவ்வளவு பெரிய நட்டம். தகரப் பாலையும், செயற்கைப் பசளையையும், யந்திரக் கலப்பைகளையும் நம்பிப் பொதுமக்களாகிய நாம் நமது பசுக்களையும் கால்நடைகளையும் துரும்பாக மதிப்பதாயின் அதிலும் மடைமையான செயல் வேறு யாது? இயற்கையாக நாம் பெற்ற செல்வத்தைக் கைவிட்டு, பளபளப்பான நிலையற்ற செயற்கைப் பொருள்களை நம்பி வாழ்வதாயின் நமது கதி அதோ கதியாகவே முடியும்.

## பரிசளிப்பு விழா

**யாழ்ப்பாணக் கல்லூரி**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா சென்ற சனிக்கிழமை 8-3-52 மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் சேர் சிஸில் லயேஸ் பரிசுகளை வழங்கினர்.

**யூனியன் கல்லூரி**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பரிசளிப்புவிழா சென்ற வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. சென்னைக் கிறிஸ்த கல்லூரி விரிவுரையாளர் பேராசிரியர் சந்திரன் தேவநேசன் விரிவுரையாற்றினர். செல்வி ஏ. ஹட்சன் பரமசாமி பரிசுகளை வழங்கினர்.

## பாதை ஓரத்தில்

பாட்டுக்காரி

சென்னையில் டிசெம்பர் மாதத்திற் சங்கீத 'சீசன்' ஆரம்பமாவது வழக்கம். எங்கள் நாட்டில் இப்போது பள்ளிக்கூடங்களின் பரிசளிப்பு 'ஸீசன்' தொடங்கியுள்ளது. உள் நாட்டிலும் கொழும்பு போன்ற பிறவிடங்களிலும் பரிசளிப்பு விழாவைப் பலரும் எதிர்பார்ப்பதுண்டு. விழாவை முன்னிட்டுக் கல்லூரி அதிபர்கள் அறிக்கைகள் தயாரித்துச் சபையில் வாசிப்பது ஒரு சம்பிரதாயமாகும்.

சமீபத்தில் ஆனந்தக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது அதன் அதிபர் திரு. மேத்தானந்தா அவர்கள் கல்வி சம்பந்தமான சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றுர். இக்காலத்து மக்கள் நாகரீகப்பழக்கங்கள் என்று சொல்லித் திருந்தா முறையான சில காரியங்களைக் கைக்கொண்டு வருவதை ஆனந்தக் கல்லூரி அதிபர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றுர். தாய்மொழிமூலங் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியத்தையும் அவர் போதிய ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கின்றுர். பெளத்தர்களின் தலைசிறந்த இக்கல்லூரி அதிபரின் கருத்துக்கள் இன்று ஆட்சிப் பீடத்தில் இருக்கும் ஒரு சில சிங்களருக்கும் அவர்களின் அரையவியல் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுக்கும் சில ஆங்கிலத் தினசரிகளுக்கும் நாராசமாகவேயிருக்கின்றது. இப்பெரியாரின் கருத்துக்களை சிலோன் ஒப்சேவர் என்ற ஆங்கிலப் பத்திரிகை நையாண்டி செய்திருக்கின்றது. இத்தகைய பத்திரிகைகள் நாட்டிற் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கும் வரை நாடு உய்யவேமாட்டாது.

### ஜென்னிங்ஸ் சூழ்ச்சி

இவைபோன்ற பத்திரிகைகள் இந்நாட்டில் இருக்கும்வரை சேர்ஜென்னிங்ஸ்போன்றவர்களும் இங்கு தங்கித் தங்கள் திருகுதாளங்களைச் செம்மையாக நடாத்திக்கொண்டே வருவார்கள். சமீபத்தில் இந்த மேற்றிசைவித்துவான் தமிழிலும் சிங்களத்திலும் வெவ்வேறு பல்கலைக் கழகங்கள் நிறுவுதல் அவசியமென யோசனை கூறியுள்ளார். புரட்சிகரமான இந்த யோசனை சிங்களர் தமிழர் ஒற்றுமைக்குக் கொள்ளி சொருகுவதேயாகும். அதுவும் இந்த அபிப்பிராயம் டொக்டர் ஜென்னிங்ஸ் அவர்களிடமிருந்து கிளம்புவதால் அதிற் போதிய ஆபத்து இருக்குமென்று தைரியத்துடன் கூறலாம்.

### சபாஷ்! முதலியார்

தெல்லிப்பழை, மஹாஜனக் கல்லூரி நாடகசபா சென்ற சனிக்கிழமை நடாத்திய அற்புதமான சமூக நாடகத்துக்கு 'சபாஷ்' சொல்லியேதீரவேண்டும்.

சபாஷ்! முதலியார் என்ற இச் சமூக நாடகம் மிக உன்னதமுறையில் அமைந்திருந்தது. நடிப்பும் காட்சி, ஜோடினைகளும் குறிப்பிடத்தக்கன. இதில் ஈடுபட்டுள்ள நடிகர்கள் அத்தனைபேரும் கலைஞர்களின் பாராட்டுக்கு உரியவர்கள்.

## மதுவிலக்கு மகாசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த அம் மகாசபையில்மதுவிலக்கு இயக்கத்தின் அவசியத்தைப்பற்றிப் பலர்பேசினர்.

வடமாகாணத்தின் பலபாகங்களிலுமுள்ள கிராமங்களில் மது விலக்குப் பிரசாரம் செய்வதெனவும் காந்தியடிகள் காட்டிய வழியைப் பின்பற்றி மனமாற்றத்தின் மூலமாக மது விலக்குப் பிரசாரம் செய்வதெனவும் சபையில் ஒப்புக்கொள்ளப்பட்டது. மதுவிலக்குச் சம்பந்தமான வேலைத்திட்டங்கள் பற்றிப் பலர் பேசினர். வேலைத்திட்டங்களை வகுத்து அவற்றை நிறைவேற்றும் பொறுப்பு நிர்வாகசபையினரது கடமையென்பதைச் சபையினர் ஒப்புக் கொண்டனர். பின்வருவோர் வட இலங்கை மதுவிலக்கு மகாசபையின் உத்தியோகததர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: டொக்டர் ஸி. குருசுவாமி. உபதலைவர்கள்: திரு. வி. நாகலிங்கம், ஜே. பி. வண சுவாமி, என். கே. நல்லையா, முதலியார் ஜி. சுப்பிரமணியம், வழக்கறிஞர் எம். எம். அப்துல்காதர். இணைச் செயலாளர்கள்: வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம், சீராவியடி, யாழ்ப்பாணம்; திரு. க. நவரத்தினம், பி. ஏ. தம்பிலேன், வண்ணார் பண்ணை. தனதிகாரிகள்: திரு. ச. அம்பிகைபாகன், திரு. விசுவலிங்கம். பதினைந்து பேரைக் கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பெற்றது. மதுவிலக்கு இயக்கத்தில ஈடுபட்டுழைக்கும் அன்பர்கள் கிராமங்கள் தோறும் கிளைகளை நிறுவுவது அவசியமாகும். விபரங்கள் யாவும் செயலாளர்களிடமிருந்து பெறற்பாலன.

## கலைஞர் அளித்த விருந்து

மகாறகம ஆசிரிய கலாசாலையில் சென்ற வியாழக்கிழமை (6-3-52) மாலை அற்புதமான இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இதில் நாற்பது கலைஞர்கள் வரையிற் பங்கெடுத்துக் கொண்டனர். முற்பகுதியில் கண் தெரியாத தாய்மார்கள் பிள்ளைகளைத் தாலாட்டிய கட்டம் மிக இனிமையாக இருந்தது. இரண்டாவது பகுதியில் 'மந்திர யாழ்' என்ற நாடகம் குறிப்பிடத்தக்கது. இதற்கு உதவியாயிருந்த இரத்மலானை குருடர் பள்ளிக்கூடத்தின் தலைவர் திரு. தசநாயகா அவர்களையும் இதை ஆதரித்து நடத்திய ஆசிரியகலாசாலைக் கிறிஸ்த சங்கத்தின் செயலாளர் திரு. ஆர். ஜே. அருளையா அவர்களையும் பாராட்டவேண்டும்.

இவ்வைபவத்திற் பங்குபற்றிய கலைஞர்களின் எதிர்காலம் பிரகாசிக்கும் என்பதற்கு ஐயமில்லை என அங்கு கூடியிருந்தவர்கள் அபிப்பிராயப்பட்டனர். ஒரு விருந்து வைபவமும் நடைபெற்றது.

## வானிசை

★ வசந்தன் ★

### கொழும்பு வானொலி

கொழும்பு வானொலி நிகழ்ச்சிப் புத்தகத்திற் குறிப்பிட்டிருப்பது ஒன்ருகவும் நடைபெறுவது இன்னென்ருகவும் சில நாட்களாக நடந்து வருவது விந்தையாகஇருக்கிறது. நிகழ்ச்சிகள் மாற்றத்துக்குட் பட்டவை என்று அந்தப் புத்தகத்திற் பிரசுரிக்கப் பட்டிருப்பதை நாம்அறிந்தோம்.

நிர்வாகிகள் கோளாறு செய்கிறுர்களா, அல்லது கலைஞர்கள் கோளாறுசெய்கிறுர்களா அல்லது இருபகுதியினரும் சேர்ந்து விளையாடுகிறுர்களா என்பதைப் பொதுமக்கள் அறிய விரும்புகிறுர்கள். ஆலோசனைச் சபையினர் இத்தக் கோளாறுகளைக் கவனிப்பார்களா? 6-3-52-ல் குறிக்கப்பட்ட நிகழ்ச்சி நடத்த முடியாததற்கு வானொலி அறிவிப்பாளர் மன்னிப்புக் கேட்டிருந்தார். திரு. மாதவன் பாடவந்தாரா, இல்லையா? வராவிட்டாற் காரணம்யாதென்பதை அறிவிப்பது நன்மை பயக்கும். திருமாதவனுடைய பாட்டுக்குப் பதிலாக ஒலிப்பதிவு ஒன்று வைக்கப்பட்டது. ஒரு தமிழ்ப் பாடலையும் கேட்க முடியாமற் போய்விட்டது. தமிழருக்கென்ற தமிழ் ஒலிபரப்பில் தமிழ்ப்பாடல்கள் இல்லாமற்போனது தூங்கிக்கொண்டிருக்கும் தமிழபிமானிகளை என்ன செய்யுமோ யாரறிவார்.

**திருமதிஇராஜேஸ்வரிநாகலிங்கம்**

இவர் வீணை வாசித்துப் பாடினர். குரலை இன்னும் நன்கு பயிற்றவேண்டும். இது இயலாதுவிடின் வீணை வாசிப்புடன் நின்று விடுவது நல்லது.

**திருமதி சண்முகவல்லி இரத்தினசபாபதி**

பாட்டு—இவர் பாடிய பொழுது சாரீர வசதிக் குறைவு தெளிவாயிருந்தது. சரீரசுகமின்மையாலோ பயிற்சிக்குறைவு காரணமாகவோ இது ஏற்பட்டிருக்கும். இவர் பாடிய ஹிந்தோள இராகப்பாடல் நன்றுயிருந்ததெனினும் கச்சேரி எதிர்பார்த்த அளவுக்கு திருப்தியளிக்கவில்லை.

**திரு. சித்திவினுயகம்**

வயலின்—இவருடைய வாத்தியத்தில் இன்னும் மிடுக்குப் போதாத குறையிருக்கிறது. இதனை இவர் கவனிக்கவேண்டும். கற்பனுசுரங்கள் கணிப்பானமுறையில் வாசித்தார். சண்முகப்பிரியாராகப் பாடலை இன்னும் அழகு பண்ணியிருக்கவேண்டும்.

## விஸ்லங்கமான அரசியல் நிலைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி பொன்னம்பலம் அவர்கள் பருத்தித்துறைத் தொகுதியிற் போட்டியிடுவார் என்ற செய்தியும் அடிபடுகின்றது. இதையறிந்து 'நீயோ நானே?' என்று சொல்லிக்கொண்டு பலர் யாழ்ப்பாணத் தொகுதிக்குப் போட்டியிடத் திட்டம் போடுவார்கள் அல்லவா? கடைசி நேரத்தில் மந்திரி பொன்னம்பலம் அவர்கள் 'நான் இருக்குபோதும் நீங்கள் யார்?' என்று சொல்லிப் போட்டிபோடுவாராயின் ஏனையோரின் நிலைமை எக்கச்சக்கமாகிவிடக்கூடும். எனவே, இத்தனை விஸ்லங்கங்களுக்கு மிடையில் மந்திரி பொன்னம்பலம் அவர்கள் தமக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டுத 'தொப்' என்று யாழ்ப்பாணத் தொகுதியிற் குதிப்பார் என்று எதிர்பார்க்க இடமிருக்கின்றது. சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதுதான் நான் குறிப்பிடும் அந்த விஸ்லங்கமாகும்.

# அமெரிக்காவின் உதவி சுயநலநோக்கம் இல்லை

மந்திரி சபைகள் மாகாணங்களில் அமைக்கப்படுகின்றன. காங்கிரஸ் கட்சியே பொதுவாக எல்லா மாகாணங்களிலும் ஆதிக்கம் பெறுவதால் அதன் தலைவரே பிரதம மந்திரிபதவியைப் பெறும் உரிமையுடையர். மந்திரி சபையை வகுக்கும் சிரமத்தைப் பிரதமர் நேரு அவர்கள் ஒரு சுற்றுநிருபத்தின் மூலம் காங்கிரஸ் கட்சித்தலைவர்கட்குத் தெரிவித்துள்ளார். இம்மாதம் முடிய முன்னர் எல்லா மாகாணங்களிலும் புதிய அரசாங்கங்கள் தொழிற்படக்கூடும். ஆனல் சென்னை, திருவாங்கூர் என்னும் இரு மாகாணங்களிலும் மந்திரிசபை அமைக்க முடிவான திர்மானஞ் செய்யவியலாதாகின்றது. திருவாங்கூரிலுள்ள கட்சிகளின் கோலங்களை நோக்குமிடத்துக் காங்கிரஸ்கட்சியினர் மந்திரிசபையை ஒருகால் அமைக்கக்கூடும். ஆனல் சென்னையிலுள்ள சுயேச்சைக்கட்சியினர் காங்கிரஸ் கட்சியுடன் ஒத்துழைக்க முற்படுவதாகக் காணேம்.

இப்போது இந்தியாவிற் சுற்றுப் பிரயாணஞ்செய்துவரும் ஸ்ரீமதி எலினேர் ரூஸ்வெல்ட் அவர்கள் இந்தியாவின் பெருமையைப் பாராட்டியுள்ளார். சுதந்திரம்பெற்ற சிலவருடங்களுள் இந்தியா இவ்வளவாக முன்னேற்றமடைந்திருப்பதைப் பாராட்டினர். இந்தியாவைப்பற்றி அமெரிக்க மக்கள் என்றும் உயரிய அபிப்பிராயமுடையரென்றும்' ஆனல் சிற்சிலர் முற்ருக இந்திய அரசினர்கொள்கையை விளங்கிக் கொள்ளாமையாற் குறைகூறியதும் உண்டென்ருர். ஆகவே அமெரிக்காவில் இந்தியா விஷயமாக நல்ல பிரசாரம் செய்வது அவசியமென்றனர். இந்தியப் பெண்மணிகள் பல்வேறு துறைகளில் முன்னேற்றமும் முதன்மையும் அடைவதைக்கண்டு தாம் சந்தோஷமுறுவதாகவுங் கூறினர். அமெரிக்க அரசினர் எவ்வித சுயநலநோக்கமுமின்றியே இந்தியாவுக்குப் பலவித உதவிபுரிய முன்வந்தனரென்றும் அதைக் குறித்து இந்தியா சந்தேகமடையவேண்டியதில்லையெனவும் குறிப்பிட்டார்.

### காஷ்மீர் பிரதிநிதி

காஷ்மீர் விஷயங்களை ஒழுங்குசெய்ய மறுபடி காஷ்மீர்வந்துள்ள டொக்டர் பிராங்கிரஹாம் இப்போது டில்லியில் வசிக்கின்றனர். பிரதமர் நேருவுடனும், ஜனதிபதி இராசேந்திரப்பிரசாத் அவர்களுடனும் இடைவிடாது பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர்; டில்லிக்கு வருமுன்னர் கராச்சியில் பாகிஸ்தான் அரசினருடன் கலந்து பேசியதுண்டு. எப்படியாவது இருநாடுகட்கிடையிலும் சமரசத்தை நிலைநாட்டத் தன்ஞல் இயலுமென்ற நம்பிக்கை உடையராகக் காணப்படுகின்றனர். ஆனல் இந்திய அரசினராவது, காஷ்மீர் அரசினராவது இவர் முயற்சி சித்திப்பதில் விசுவாசங்காட்டுகின்ருரில்லை. பாகிஸ்தான் அரசினரைத் திருப்திப்படுத்த இயலாதென்பதே இவர்கள் எண்ணமாகும். இருந்தபோதிலும் கிரஹாம் அவர்களின் முயற்சி வெற்றிபெறின் அது யாவர்க்கும் நன்றே.

### பெரிய தொழிற்சாலைகள்

இந்திய அரசினர் நாட்டின் முன்னேற்றத்தையும் பொருளாதாரத்தையும் இலக்காகக் கொண்ட பல பெரிய தொழிற்சாலைகள் அமைத்துவருகின்றனர். வங்காளத்திலுள்ள ஸிந்திரி என்னும் இடத்தில் 50 கோடி ரூபாய் செலவில் பசளை தயார்செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்போது பம்பாய் மாகாணத்தில் பூனு நகருக்கணித்தாக பென்ஸிலின் என்னும் அரிய மருந்து செய்யப்படும் தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

## இந்தியா

### என்ன கொடுமை

இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் போர்த்துக்கேயருக்குச்சொந்தமான கோவாஎன்னும் சிறியதேசம் உண்டு. அங்கே வசிப்பவர் இந்தியரே. அங்கே வசிப்போர் அடைந்துவருங் கஷ்டங்கட்கு எல்லையில்லை. அந்நியநாட்டினர், பிரிட்டிஷார் போல் இந்தியாவை விட்டு விலகவேண்டுமென்று இந்திய அரசினரின் கொள்கையைக் கோவாவிலுள்ள போர்த்துக்கேய அரசினர் சிறிதும் பொருட்படுத்துவதாகக் காணேம். கோவா தேசம் தமக்குச் சொந்தமென்றும் தாம் ஒருபோதும் அதைக் கைவிடவியலாதென்றும் வாதாடுகின்றனர். அத்துடன் அங்கே வசிக்கும் இந்தியர்க்குச் செய்யும் கொடுமையும் எல்லையில்லை. இந்தியர் எவரும் மகாத்மா, நேரு, படேல் முதலியோரின் படங்களைத் தானும் வீட்டில் வைக்கக் கூடாது. இந்தியாவுடன் சேரவேண்டுமென எவரும் பேச அல்லது எழுதவியலாது. அப்படிச் செய்வோர்க்குப் பெருந்தண்டனை விதிக்கப்படுகின்றது. இது எவ்வளவு காலத்துக்கோ தெரியவில்லை.

---

## POST OF TEMPORARY CLERK,

**Town Council, Manipay**

Applications are invited by the Chairman, Town Council, Manipay, for the above post.

2. The post carries a salary of Rs. 20/- per mensem. A temporary cost of living allowance at Government rates and conditions will be paid. No special temporary allowance is payable.

3. Terms of engagement:- The post is temporary and non-pensionable and does not carry any claims to permanent employment under this Council.

4. Applicant must be a Ceylonese and should not be less than 25 years and over 45 years of age on 21-3-52 and should have passed the J. S. C. English examination or its equivalent. Preference will be given to those who possess knowledge and experience in the Electrical Stores work.

5. Applications should be accompanied by two copies of recent testimonials regarding character and ability and a copy of the applicant's certificate of birth.

6. The selected candidate will be on one month's trial and will be subject to the approval of the C. L. G.

7. Applications should be addressed to the Chairman, Town Council Manipay, on or before **March 21, 1952.**

8. Applications sould be addressed to the Chairman. and not personally to the undersigned.

9. Any form of canvassing or any attempt to influence the selection of a candidate will disqualify such a candidate.

10. Applicants will be required to present themselves for an interview, if necessary, at an appointed time. No travelling or other expenses will be paid.

11. Applications which do not conform in every respect to the requirements of this notification will be rejected.

S. H. Perinbanayagan.
Chairman, T. C.

Manipay, 12-3-52. [4561]

---

ஆசிரியருக்குக் கடிதம்

## ஐயவினு

| | |
|---|---|
| சி. சுப்பர், (தம்பி) | சி. சின்னவர் |
| சு. கந்தியான் (மகன்) | சி. சிதம்பரப்பிள்ளை (மகன்) |
| க. வயிரமுத்து (மகன்) | சி. தில்லையம்பலம் (மகன்) |

சி. தில்லையம்பலம் இறந்து மூப்பதாம் நாள் இவரின் சகோதரர்முறையினரான க. வயிரமுத்தர் இறந்தார்; இவரின் பிரேதம் மறுநாள் எடுக்கப்பட்டது. க. வயிரமுத்தருடைய பிரேதம் வீட்டில் இருக்கத் தக்கதாக சி. தில்லையம்பலத்தின் ஆசௌசம் கழித்துகிரியை செய்ய விதி உண்டா? சி. தில்லையம்பலத்தின் ஆசௌசம் மூன்றினதானபடியால் பின்வரும் ஆசௌசம் நீங்கப்படுமென்ருலும் தமையனுடைய பிரேதம் தகனம் செய்வதற்கு முன் தம்பியாருடைய ஆசௌசம் கழிக்கலாமென்று ஆகமவிதி கூறினல் அது பொருத்தமாய் இருக்குமா? ஆகமவிதியிருந்தாலும் உலக முறையில் செய்வது பொருந்துமா? க. வயிரமுத்தர் இறந்து மூன்று இரவு கழிந்தபின் தில்லையம்பலத்தின் ஆசௌசம் கழித்துக்கிரியை செய்யலாமென்று சில பெரியார் அபிப்பிராயப்படுகிருர்கள்.

இரண்டாவதாக சி. தில்லையம்பலம் இறந்து 26-ம் நாள் அவருடைய மகள் பிரசவித்து அவ்வீட்டில் இருக்க, தில்லையம்பலத்தின் ஆசௌசம் கழிப்பதினல் பிரசவ ஆசௌசம் நீங்குமென்ருல் பின் பிரசவ ஆசௌசம் 31-ம் நாளில் செய்ததேன்? பிரசவித்த பெண் வீட்டில் ஒரு பக்கத்தில் இருப்ப, சி. தில்லையம்பலத்தின் ஆசௌசம் கழிப்பதாயின் அது முறையாகுமா?

இவ் ஐயவினுக்களுக்கு கற்றறிந்த பெரியோர்கள் இப்பத்திரிகை மூலமாகப் பதில் தருமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

உடுவில் **சி. இராமலிங்கம்**
12-3-52

---

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } **No. 1415**

In the matter of the estate of the late **Veluppillai Chelliah** of Chunnakam.

*Deceased*

Sinnachchi widow of Sivasamboo of Chunnakam.

*Petitioner*

1. Somu Vairamuttu, 2. Somu Vaitilingam, 3. Sinnachchi widow of Sabapathy, 4. Achchimuttu daughter of Somu, 5. Murugesu Ponniah and wife, 6. Thangam, 7. Murugar Sinnaddy and wife, 8. Ammakkuddy all of Chunnakam. 9. Veluppillai Kandaiah of Customs office, Brickfield road Kualalumpur. 10. Kandaiah Thirunavukkarasu of do. 11. Sulosanathevy daughter of Kandaiah of do.

*Respondents*

This matter coming on for disposal before K. D. de Silva, Esquire, District Judge, Jaffna, on the 1st day of February 1952 in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the petitioner abovenamed and the affidavit of the petitioner dated 27th January 1952 having been read.

It is ordered that the petitioner as a creditor of the estate of the deceased abovenamed be declared entitled to have letter of Administration to the said estate issued to her, unless the respondents abovenamed or any other person or persons interested shall on or before the 28th day of March 1952 show sufficient cause to the satisfaction of this court to the contrary. This 1st day of February 1952.

(Sgd.) **K. D. de Silva**
[4559-ii] District Judge.

---




# குமாரி கமலா நாட்டியம்

## அபிநய ஆற்றலும் பொலிவுறு தோற்றமும்

14-3-52

நாட்டியக்கலையில் இலங்கை மக்கள் இந்தியரிடமிருந்து அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறதென்பது குமாரி கமலாவின் நடனக் கச்சேரிக்குச் சென்றவர்கள் மனதில் நன்கு படிந்திருக்கும். இலங்கையில் நாட்டியக்கலை மிகவும் கேவல நிலையில் தான் இருக்கிறது. நாட்டியக்கலையைப் படிப்படியாகக் கற்று அரங்கேறுவதுதான் சரியான முறை. இதற்குப் பதிலாக இங்குள்ள நாட்டியக்கலை ஆசிரியர்கள் சில முத்திரைகளையும் அபிநயத்தையும் பயிற்றியபின், தம் சிஷ்யர்களைச் சிறந்த நாட்டியக் கலைஞர்களாக அரங்கத்திற்குக் கொண்டு வந்துவிடுகிருர்கள். இது கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழிதானுமதுவாகப் பாவித்து தன்பொல்லாச் சிறகை விரித்தாடுவதையேஒக்கும். குமாரி கமலா இப்பொழுதுஈட்டியபுகழ் அவருடையஆசிரியர்நாட்டிய கலாகேசரி வழுவூர் இராமையாபிள்ளை அவர்களையே சாரும். கமலாவின் இயற்கையான தோற்றப் பொலிவும் அபிநயம் பிடிக்கும் ஆற்றலும் கலாரசிகரின் உள்ளத்தை வசிகரித்ததில் ஆச்சரியமொன்றுமில்லை. இத்தகைய நடனக் கச்சேரிகளை நம் எதிர்கால நாட்டிய நட்சத்திரங்கள் அடிக்கடி பார்த்துத் தம்மைத் திருத்திக்கொள்ளலாம் என்பதிற் சந்தேகமில்லை

### நடனப் போட்டி

கிராமியப் பாடல்கள், நடனம் ஆதிய நிகழ்ச்சிகளிற் பாடசாலைகளுக்கிடையே ஒரு போட்டி யுனெஸ்கோ ஆதரவில் கடந்த சனிக்கிழமையன்று நாதனசாலை மைதானத்தில் நடைபெற்றது- மட்டக்களப்புப் பெரிய கல்லாறுப் பாடசாலை மாணவிகள் நாட்டுக் கூத்துத் தாளப்பிரிவில் முதற்பரிசு பெற்ருர்கள். கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவிகள் ஊஞ்சற்பாட்டுப்பிரிவில் முதற்பரிசு பெற்ருர்கள். ஊஞ்சற்பாட்டில் இரண்டுவகையுண்டு. ஒன்று மிகவும் மெல்லெனச் சொல்லும் தன்மையது. மற்றது மிகவும் ஆண்மையும் வீரமும பொருந்தியது. ஊஞ்சல் பறக்கும் விசைக்கேற்பப் பாட்டும் இருமருங்கும் பறக்கத் தக்க உயிர்க்களையுடன்கூடியது. இத்தகைய ஊஞ்சற்பாட்டுக்களையும் தமிழர்கள் அழியவிடாது பேணவேண்டும். கொக்குவில் மாணவிகளின் உடையலங்காரம் யாவர் மனதையும் கவர்ந்தது. இதற்குப் பொறுப்பாயிருந்த ஸ்ரீமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்களைப் பாராட்டவேவேண்டும். நாட்டுப் பாடல்கள் கிராம நிகழ்ச்சிகள் முதலியவற்றை, இக்கால நாகரீக முறைகளைக் கலந்து கையாளாயல், சுத்தமாகவே பேணிவளர்க்க முயற்சி செய்யவேண்டும்.

### காவடியாட்டம்

கொழும்புப் பொருட்காட்சி ஆரம்பதினத்தில் நடைபெற்ற காவடியாட்டம் மிகச்சிறந்ததெனப் பலர் பாராட்டிப்பேசினர். ஆனல் சமயத்தொடர்புடைய இந்தக்காவடியாட்டத்தைக் கேவலம் பொது ஊர்களிலும் பவனிகளிலும் சேர்த்துக்கொள்வது நல்லதன்று எனச் சிலர் கருதுகின்றனர். காவடி நடனத்தைப் புனித நடனமாகக்கொள்ளாமல் விடும் காவடிகளைக் கண்டிக்கவேண்டுமென்றுகூடச் சிலர் மனங்கொதிக்கின்றனர். காவடி நடனம் சமயசம்பந்தமானதா? அல்லது அது ஒரு தனிக்கலையா? என்ற கேள்விக்கு ஏற்றவிடை காண்பது கஷ்டம். அதனைத் தமிழறிஞர்கள்தான் தீர்த்துவைக்கவேண்டும்.

### கொழும்புக் காட்சி

காட்சி பார்க்கச் செல்லும் சனங்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரிய நண்பர்களைத் தரிசிக்க வேண்டுமானல் சனி ஞாயிற்றுக் கிழமைகளிற் கொழும்புப் பொருட்காட்சி மைதானத்திற்குச் செல்ல வேண்டியதுதான். எல்லாரையும் தாராளமாகச் சந்தித்துப் பேசலாம். இந்தியா மணிமண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் இரத்தினக் கம்பளத்தைப் பார்க்க நீண்ட கியூ வரிசையில் நிற்கத்தான் வேண்டும். கலாமண்டபத்தில் பலதேசத்து ஓவியவல்லுநரின் கைவரிசையைக் கண்டு மகிழலாம்.

### திரு. பாலசுப்பிரமணியம்

இலங்கை வானெலியிற் கிராம நிகழ்ச்சிப் பொறுப்பதிகாரி திரு. வி. என். பாலசுப்பிரமணியம் பயிற்சிபெறுவதற்காக இந்தியாவிலுள்ள வானெலி நிலையங்களைத் தரிசிக்கச் செல்கிருர். அவர் இம்மாதம் 15-ந் திகதி விமான மார்க்கமாக முதலில் திருச்சிக்குச் செல்கிருர். இவர் சிறந்த சங்கீத விற்பன்னரும் நாடகம் நடிக்கும் திறமையும் வாய்க்கப்பெற்றவர். இவ்வித பயிற்சியாற் கிராம நிகழ்ச்சி சிறந்து விளங்கும் என எதிர்பார்க்கலாம்.

---

# கால்நடைகளைக் கைவிடாதீர்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விளைவுப் பிரதேசங்களிலிருந்து வைக்கோலை வருவித்துக் குறைந்த விலையில் கமக்காரர்களுக்கு நேரடியாக விநியோகிக்கத்தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று இம் மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

3. வடமாகாணத்திலுள்ள கமக்காரர்களது உபயோகத்திற்கு கால்நடைகள் மிகவும் போதாமையால் கால்நடைகள் விலை அதிகரித்துள்ளது. ஆகையால் வெளியிடங்களிலிருந்தோ, வெளிநாடுகளிலிருந்தோ உபயோகத்துக்குரிய கால்நடைகளைக் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்து தருமாறு இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. வடமாகாணத்தில் கால்நடைகள் விருத்தியடைவதற்காக வருடந்தோறும் ஏற்ற இடங்களில் கால்நடைகளின் சந்தைகள் (மாட்டுச்சந்தை) ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைக் கையாளுமாறு அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

5. வடமாகாணப் பகுதிகளில் கால்நடைகள் பாதுகாப்புச் சம்பந்தமாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாகவும் கௌரவ கமத்தொழில் மந்திரியார் அவர்களையும் வடமாகாணதிபதியவர்களையும் ஏனைய அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுவதற்காகத் திருவாளர்கள்: அ. அருளம்பலம், ஆர். என். சிவப்பிரகாசம், சே. சண்முகம், செ. துரைசிங்கம், க. நவரத்தினம், சி. க. வேலாயுதபிள்ளை ஆதியோர் கொண்ட தூதுக்கோஷ்டியை அகில இலங்கைக் காந்திய சேவா சங்க ஆதரவிற் கூட்டப்பட்ட முதலாவது கால்நடைகள் பாதுகாப்பு மகாநாடு நியமித்துள்ளது.



# உறவு மலர்ச்சி

## 1. ஆனந்தன்

சாரதாவைத் தெரியாதா? அவள் என் அருமைச் சகோதரி. ஒரேயொரு சகோதரி. நான் அன்புடனே, ஆசையுடனே கண்ணுங் கருத்துமாகக் காத்து வளர்த்த சகோதரி. ஆனால் அவளது யௌவனத்திலே நறுமணம் கமழும் ஓர் இளம் மலர் என அவள் திகழும் வேளையிலே காலன் கண் வைத்தான். அதிகாலையிலேயே அப் புது மலரைக் கொய்துகொண்டு மறைந்தான்!

சகோதர பாசம் என்னை வதைத்தது. நினைவு அலைகள் மனசை அலசின. உள்ளம் துடிதுடித்தது. உதிரம் கொதித்தது. ஆனால்...... அவள் அகன்றவள்தான்! எனினும் என் உள்ளத்திலே அழியாச் சின்னமாய், பழைய எண்ணங்களைப் புதுப்பிக்கும் தழும்பாய், அவள் வசித்தாள்! எதிர்பாரா வேளைகளில் என்னை வதைத்தாள்!

அன்று நான் தனிமையில் இருந்தேன். நீல வானிலே அலைந்துகொண்டிருந்தது நெஞ்சம். அலைகளிலே மிதந்து வந்தாள் அவள் — சாரதா! வைத்த கண் வாங்காமல் அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்து விம்மி வெடித்துக்கொண்டது என் மனம்.

"ஆனந்தா!" என்றுகொண்டு அறையுட் புகுந்தாள் அம்மா. அம்மாவுடன் கூட ஒரு பெண்ணும் வந்தாள். அவள் யார்? ஏன் வந்தாள்? என்றெல்லாம் கேட்க என் மனம் எளவில்லை. மறுகணம் சாரதாவின் எண்ணம். என்னையுமறியாது என் கண்கள் நீர்த் துளிகள் அரும்பின...

ஆம்! சாரதாவைப் போன்ற சாந்தமான முகம்! வசீகரமான தோற்றம்! அவளைப்போன்ற உருவம்......

"ஆனந்தா! இவளைத் தெரியுமா? இவள்தான் பத்மினி. அடுத்த வீட்டில் வசிக்க வந்திருக்கும் காமாக்ஷியின் மகள். இவளுடைய அண்ணன் நடராஜன் இவ்வூருக்கு வேலையாக வந்திருக்கிறானும். இனிமேல் உன்னுடன்தான் இந்துக் கல்லூரியிற் படிக்கவும்போகிறாள். இந்த ஆண்டு எஸ். எஸ். ஸி. க்குப் பிரவேசிக்கப் போகிறாளாம்!' என்று எதை எதை எல்லாமோ சொல்லி அறிமுகப்படுத்தினாள்.

"உங்களிடம் ஏதும் கதைப் புத்தகங்கள் உண்டா?" என்று மேலே பேச்சை ஆரம்பித்தாள் பத்மினி.

"ஆம், இருக்கின்றன. இதோ! விரும்பியது எதையும் எடுக்கலாம்" என்று அலமாரியைத் திறந்து காண்பித்தேன்.

அதற்கிடையில், அம்மாவும் வெளியே சென்றாள். போகும்போது, "தம்பி! நான் காமாக்ஷியுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். வெளியேபோனால் என்னிடம் சொல்லிவிட்டுப் போ" என்று சொல்லிச் சென்றாள்.

அலமாரியினுள்தேடி **எண்ண அலைகள்** என்ற நாவலைக் கையில் எடுத்தாள் பத்மினி. வெளியே எடுத்து அதை அவள் புரட்டும்பொழுது அதனுள் இருந்து கீழே விழுந்தது ஒரு புகைப்படம். ஆம், அது சாராதாவின் படந்தான்.

ஆனால், பத்மினி என்ன நினைத்தாளோ தெரியாது. என்னைப் பார்த்ததும் பாராததுமாக ஒரு புன்னகை செய்துவிட்டு அதை இருந்த இடத்திலே வைத்துவிட்டாள்.

"பத்மினி, யாருடைய படம் தெரியுமா? அவள்தான் எனது சகோதரி—சாரதா!"

"சகோதரியா, அவள் எங்கே?" என்று ஆவலுடன் கேட்டாள்.

என்னை அறியாமலே என் கண்களினின்றும் இரு துளிகள் உதிர்ந்தன!

"அவள் .... அவள் ..."

மேலே என்னால் பேச இயலவில்லை. அவளும் விஷயத்தை உணர்ந்துகொண்டாள் போலும்; பேச்சை வேறு விஷயத்திற்கு மாற்றினேன்.

"நீங்கள் இப்புத்தகம் வாசித்து விட்டீர்களா?" என்று கேட்டுக்கொண்டே என்னைப் பார்த்தாள்.

"ஆம்" என்பதுபோலத் தலையை அசைத்தேன்.

"அப்படியானால் நாளைக்குத் திருப்பித்தரட்டுமா?" என்றாள்.

## இ. அம்பிகைபாகன்

அதற்கும் தலை அசைத்தேன். அத்துடன் அவள் சென்றுவிட்டாள்.

* * *

அன்று தொடங்கி நானும் அவளும் மிகவும் ஐக்கியமாகப் பழகினோம். நான் படித்த இந்துக் கல்லூரியிலேயே அவளும் சேர்க்கப்பட்டாள். முன்பு நானும் சாரதாவும் கூடிச் செல்வதுபோல, பின்பு நானும் பத்மினியும் சென்றோம். நானும் பத்மினியைச் சாரதாபோலவே பாவித்து மிகவும் அன்பாக நடத்திக்கொண்டேன்.

அவளும் என்னுடன் மிகவும் அன்பாக நடந்துகொண்டாள. ஏதும் விளங்காத பாடங்கள் இருந்தால், முழு உரிமையுள்ளவள்போல என்னைப் பலாத்காரஞ் செய்து தனது விஷயத்தை முடித்துக்கொள்ளுவாள். 'ஆனந்த்' என்று அன்பாகவே அவள் என்னை அழைத்துவந்தாள். கல்லூரியிலும் அவள் என்னுடன் மிகவும் அன்னியோன்னியமாகவே பழகலானாள்.

இவை எல்லாம் சில மாணவர்களுக்கு அருவருப்பாகவும், ஆத்திரமாகவும் இருந்தன. அவளது அன்புக்கு அலைந்தனர் பலர். அவர்களுள் அவளது சொந்த மைத்துனன் நடராஜனது மனைவி வத்ஸலாவின் சகோதரன் பத்மநாபனும் ஒருவன்!

ஆனால் அவர்களது எண்ணங்களுக்கு அவள் இசையவில்லை. அது காரணமாக எம்மிருவரையும் பற்றி எத்தனையோ விபரீதமான பேச்சுக்கள் எழுந்தன.

இது விஷயம்பற்றி அவள் அவ்வளவு கவலைப்படவில்லை. "இது இயற்கைதானே" என்று பலமுறை எனக்கே சொல்லி இருக்கிறாள். "எது இயற்கை?" என்றால், "ஏமாற்றத்தின் விளைவாக இப்படி எத்தனை பேச்சுக்கள் பேசுவார்கள்? இவற்றை எல்லாம் அலட்சியஞ் செய்துவிடாது வேறு என்ன செய்வது?" என்பாள்.

ஓரளவிற்கு அது உண்மைதான். ஒரு மாணவனும் ஒரு மாணவியும் சற்று இதமாக நடந்துகொண்டால், அது மற்றவர்களுக்கு வேம்பாகவே இருக்கும்! மாணவர்கள் மட்டுமல்ல; ஆசிரிய—மாணவர்களிடையே கூடச் சந்தேகங் கொள்பவர் பலர். ஒரு மாணவி மற்றவர்களிலும் பார்க்கத் திறம்படச் சோதனையிற் சித்தியடைந்துவிட்டால் அதுவே போதும்! பல கதைகள் பறக்க ஆரம்பிக்கும்! அதை எல்லாம் லக்ஷியஞ்செய்தால் வேறு விஷயங்களுக்கு வேளையே போதாது! ஆனால் இதை எண்ணி நானும் பேசாமல் இருக்க முடியவில்லை. அதற்கும் இரண்டு பிரதானமான காரணங்கள் இருந்தன.

ஒன்று, அவள் ஒரு இளம் பெண். இவ்வகையான வீண் வதந்திகள் அவளது வாழ்வையே பாழாக்கி, அவளது பெயரிலே அழியாத் தழும்பை — வடுவை — உண்டாக்கி விடவுங் கூடும்! மற்றையது, அவள் எனது சகோதரி போன்றவள். அவளையும் என்னையும் பிணைத்து விபரீதமான வதந்திகள் பரவுவது என்றால் சகிக்க இயலாத விஷயமாக இருந்தது.

ஆனாலும் அவளுடன் ஐக்கியமாகப் பழகுவதையோ, அன்புடன் பேசுவதையோ நான் நிறுத்தவில்லை——இல்லை— நிறுத்த இயலவில்லை! அவளும் தெருப்பேச்சையெல்லாம் சற்றேனும் பாரதூரமானவையாகக் கொள்ளவில்லை!

என்றாலும் என் உள்ளத்தில் அந்த முளை கருகவில்லை. "இந்த வீண் வதந்தி ஒரு பெண்ணின் பெயரை, பெருமையைப் பாழாக்கிவிடுமே! கால வெள்ளம் புரண்டு ஓடலாம்; கதைகளும் ஒன்று பலவாகி, பல நூறாகி நாளடைவில் மறைந்து புதையலாம். ஆனால் இதுவிஷயத்தில்...... அப் பழைமையை எல்லாம் கிளற வேண்டிய ஒரு சமயம் வருமல்லவா? அச்சமயத்தில் இக்கறை நீக்க முடியாத நிரந்தரக் கறையாகத் தோற்றமளிக்கலாம் அல்லவா?...பின்பு...? ......' என்று துளிர்த்து வளர்ந்தது — அச் சந்தேகம்! அந்த அச்சம்! —தொடரும்




**குறிஞ்சித்தேன்:** சங்கநூற் காட்சிகள் — ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன் பிரசுரம்: அமுதநிலையம் லிமிடெட், தேனாம்பேட்டை, சென்னை—18. விலை: ரூபாய் 3. பரிசுப்பதிப்பு ரூ. 5

சங்கச் செய்யுட்களெல்லாம் தமக்கென ஒரு தனி நடையுடையன; தனிப்பண்புடையன. அவற்றை இக்காலத்திற் கல்வி பயில்வோர் சுவைத்தின்புறுவது சிறிது சிரமம் ஏனெனில் அவை பொருள்களைச் சொல்லும் நடையும், தன்மையும் முற்றிலும் இக்காலத்திற்கு வேறு விதமானவை. அவற்றை முறையாகப் பாடங் கேட்டு வருபவர்களும் அருகி வருகிறார்கள். ஒரு காலத்தில் அவற்றை நன்கு விளக்கக் கூடியவர்கள் அற்றுப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'சங்கச் செய்யுள்களின் பொருளை விளங்கி அவற்றை உணருந்தோறும், உணருந்தோறும் வற்றாத இன்ப ஊற்று அவற்றில் இருக்கின்றது' என்ற எண்ணத்தை நூலை வாசிப்பவர் அடைவர் என்பது எனது கருத்து. சங்கச் செய்யுள்களில் ஆழ்ந்த கருத்திருக்கிறதென்பதை உணருவதோடு, அவற்றின் பொருள்களை உணர ஒரு திறவுகோலாகவும் இந்நூல் விளங்கும்.

குறுந்தொகை என்ற நூல் நானூற்றிரண்டு செய்யுள்களை உடையது. அந்நூலைப் படிக்க விரும்புபவருக்கு, அதைப்பற்றிய எல்லா விபரங்களையும் கூறி, உதாரணத்திற்குச் சில செய்யுட்களையும் காட்டி, வழி திறந்து விடுகிறது இந்நூல். இப்பணியில் இது இரண்டாவது நூல். முதலாவது நற்றிணைபற்றி மனைவிளக்கு என முன்னர் வெளிவந்தது.

குறுந்தொகையில் உள்ள ஏழு செய்யுட்களை ஆசிரியர் எடுத்திருக்கிறார். கடவுள் வாழ்த்தையும், அடிபட்ட செய்யுளாகிய 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற இரண்டாஞ் செய்யுளையும் முதலில் எடுத்திருக்கிறார். ஏழு செய்யுள்களும் அந்நூலில் ஏனைய செய்யுள்களிலும் பார்க்கச் சிறப்புடையன வல்ல. சங்கநூல்களிலுள்ள செய்யுள்களை ஒன்றிலொன்று உயர்ந்ததென்று சொல்லமுடியாது. எல்லாம் ஒரே நிறையை உடையன.

முழுவதையும் எடுத்து இன்னனம் விளக்கி எழுதினால் பெரிய கலைக்களஞ்சியமாகி விடும். எனவே ஆசிரியர் ஏழு செய்யுள்களை எடுத்தார். இவைதான் அந்நூலில் சிறப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

**THE SKANTHA** — Skantha Varodaya College, Chunnakam. *Editor*: S. Selvaratnam, B. A.,

வாழ்க்கையின்மூலம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டி அவர்களை நல்வாழ்வுக்குப் பக்குவப்படுத்துவதே செம்மையான கல்விமுறையெனச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிவெளியீட்டின் ஆசிரியர் கூறுகின்றார். அத்துடன் பிள்ளைகளின் நாயகத் தன்மையை வளமாக்குவதே முற்போக்கான பள்ளிக்கூடங்களின் நோக்கமாக அமைதல் வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வெளியீட்டில் அருமையான கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியாகியுள்ளன. இலங்கையிற் கூட்டுறவு இயக்கம் என்பதுபற்றி ஏ. செம்பக்குட்டி ஆராச்சியவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். 'காந்தீயம்' பற்றி கு. அம்பலவாணர் அவர்கள் எழுதியுள்ளார். மாணவர்களின் கட்டுரைகள் உட்படக் கல்லூரி பல்வேறு துறைகளிலும் அடைந்துள்ள வளர்ச்சிபற்றிய குறிப்புக்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. சிங்களத்திலும் தமிழ் மாணவர்கள் சின்னஞ்சிறு கட்டுரைகள் எழுதியுள்ளனர். புகைப்படங்களும் உள. அழகான வெளியீடு.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 7594**

வண்ணார்பண்ணை கிழக்கு,
கதிரவேற்பிள்ளை இராசையா
கைம்பெண் இராசம்மா
வழக்காளி

வேலணை மேற்கு,
1. சதாசிவம்பிள்ளை சபாரத்தினம்
2. பெண் இலட்சுமிப்பிள்ளை
3. வீ. கந்தையா பொன்னம்பலம்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிற் கோட்டில் 7594-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு ஆண்டுக் காணிகள், 1952-ம் ஆண்டு ஏப்றில் (சித்திரை) மாதம் 4-ந் திகதி (4-4-52) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**— முதல் வட்டி ரூபாய் 2772-50-ம், இதில் ரூபாய் 2000/-க்கு 5-3-51 திகதி தொடக்கம் 23-8-51 திகதி வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 290-29 சதம்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "பீலி கொண்டை" கிலேப்பரப்பு பதினைந்து (15) ம் குளி $3\frac{3}{4}$-ம் எல்லை: கிழக்கு, கந்தையா சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு, கந்தையா சுப்பிரமணியத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு, பாமலிங்கம் பெண் மாகதத்தின் ஆதனம். தெற்கு, பொன்னம்பலம் பெண் மனோன்மணிக்கும் நடராசா பெண் மங்கையர்க்கரசிக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும். முற்பதிவு C 109/15

2. மேற்படி வேலணை மேற்கிறை "ஆலம்புலவு" தெற்பரப்பு நாலு (4) எல்லை: கிழக்கும் தெற்கும் சிற்பனார் முருகமூர்த்தி கோவிலுக்குரிய ஆதனம். வடக்கு, ஒழுங்கை. மேற்கு, சொக்கலிங்கம் இளையதம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் இதில் நிற்கும் தென்னைகளும்.

முற்பதிவு C 231/182.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை 16-12-1952

[ 4558 ]




**அன்பான மருமக்களே!**

ஆடு, மாடு, எருமை முதலிய மிருகங்களைக் கால்நடைகள் என்று சொல்லுகின்றோம். இவை மனிதருக்கு மிகவும் உபயோகமானவை. முக்கியமாக மாடும் எருமையும் உழவருக்கு உயிர்போன்றவை. இம் மிருகங்களின் உழைப்பினுல் தான் உழவு சிறப்புறுகின்றது. உழவனே உலக மக்களுக்கு உணவை உதவி வருகின்றான். இவ்வாறு எமது பசியைத் தீர்ப்பதற்கு உடலை வருத்தி உழைக்கும் மிருகங்களை மனிதர் கொன்று தின்பது அக்கிரமச் செயலாகும்! இறைச்சிக்காக இம் மிருகங்களை விற்பவர்களும் ஒரு வகையிற் பாவம் செய்பவர்களேயாகின்றனர். ஆனபடியால், மருமக்களே! வாயில்லா இப் பிராணிகளை நாங்கள் காப்பாற்ற வேண்டும், அவற்றைப் பேணி வளர்க்கவேண்டும். இது பற்றி உங்களுடைய அபிப்பிராயங்களை அறிய விரும்புகின்றேன்.

கேசரி மாமா

## காலிமுகக் கடற்கரை

மே·575 கே. கமலம்

பச்சைப் பசேலென்ற நீண்ட புல் வெளி. இருமருங்கும் கருமையான தார் வீதிகள். ஒரு வீதியைக் கடல் அலைகள் எட்டி உதைப்பதைப் பார்த்துக் கொண்டே நிற்கலாம்.

காலையிற் சில கனவான்கள் அங்கு குதிரைச் சவாரி செய்வார்கள். மாலையிலோ பெண்களும் உத்தியோகத்தர்களும் மாணவர்களுட்பட மற்றும் பலரும் உல்லாசமாக உலாத்தித்திரிவார்கள். அங்குள்ள இருக்கைகளில் இன்பமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள் சிலர்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அங்கு பெருந் தொகையான மக்களைக் காணலாம். பல வகையான ஆடைகள் அணிந்தவர்கள்; பல மொழிகள் பேசுபவர்கள், பல நாட்டவர்கள் அங்கு கூடுவார்கள். இளம் தம்பதிகள் பிள்ளைகளை அழைத்துவரும் பெற்றோர்கள் எல்லோரும் இன்பமாகப் பொழுதுபோக்குவார்கள்.

சிலர் அன்றுட நிகழ்ச்சிகளையிட்டுப் பேசுவார்கள். சிலர் உடைகளின் மாதிரியையிட்டுப் பேசுவார்கள். சிலர் அரசியற் கொள்கைகளையிட்டுப் பேசுவார்கள். சிலர் சமூக சீர்திருத்தம் பற்றி விவாதிப்பார்கள்.

அரசியற் கூட்டங்கள் பல நடைபெறுவது வழக்கம். டொக்டர் பெரரா, டொக்டர் கொல்வின் ஆர். டீ, சில்வா, தோழர் பீட்டர் கெனமன் போன்றவர்களின் விரிவுரைகளைக் கேட்க மக்கள் திரண்டு வருவார்கள். வாலிபர்கள் துண்டுப்பிரசுரங்களை இங்கு விற்பது முண்டு.

நானும் இங்கு எனது சிநேகிதிகளைக் கண்டு பேசுவேன். இரவு பத்து மணிக்கு அநேகமாக மக்கள் கலைந்து விடுவார்கள்.

மிதிபட்ட புற்களைத் தென்றல் தடவிக்கொண்டிருக்கும். அமைதி நிலவாவண்ணம் கடல் தனது அலை ஓசையை எழுப்பிக் கொண்டே இருக்கும்.

### மருமக்களுக்கு :

பாலர் பகுதியிற் சேர்ந்துள்ள மருமக்கள் கடிதங்கள், கட்டுரைகள், கதைகள், எழுதி அனுப்பும்போது பதிவு இலக்கத்தை தயுங் குறிப்பிட வேண்டும். பதிவு இலக்கம் இல்லாது வரும் விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

—கேசரி மாமா

### புதியமருமக்கள்

மே. 602. செ. கந்தசாமி, துன்னாலை தெற்கு, கரவெட்டி.
மே. 603. வே. அப்பாத்துரை; 10, சி. எம்.எஸ். சேச் பக்கம், நல்லூர்—யாழ்ப்பாணம்.
மே.604. ச. அருளாநந்தம்; சிவாநந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.

இவர்களனைவரையும் எனது மருமக்களாகச் சேர்த்துக் கொண்டேன்.

### பிறந்ததின வாழ்த்துக்கள்
### 16-3-52—22-3-52

மே.22. சே. விசாலாட்சி, மே. 25. பி. பெனடிக்ற், மே.120· இ. பொன்னையா, மே. 242. ஆ. சுப்பிரமணியம், கி. 246. வ. நித்தம்மா, மே. 305. த. நரேந்திரம், மே. 440. ச. அரங்கநாயகி, மே.446. ஏ. புவனேஸ்வரி, மே. 461. ந. சிவதாசன், மே. 467. ச. தயானந்தன், மே. 504. வீ. க. ஸ்ரீபதிதாசன், மே. 525. பெ. சரஸ்வதி.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்று போல இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக!

### உலகின் வயது

உலகின் வயது 300 கோடி வருடமெனப் பிரபல இரசாயன நிபுணரும், நோபல் பரிசு பெற்றவருமான பேராசிரியர் ஹரல்ட் உரே மதிப்பிட்டுள்ளார்.

### உயிர்வர்க்கங்களின் உற்பத்தி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தன. இம் மனிதன் பேசுந் திறமையற்றவனும், உடையற்றவனும், குடும்ப உறவேயன்றிச் சமூக உறவில்லாதவனும், நெருப்பின் பிரயோகத்தைத் தெரியாதவனுயும் இருந்தான். குளிர் காலங்களிற் குகையில் வசிக்க வேண்டியவனதலால் குகை மனிதனென்றும் அழைக்கப்படலாயினன். இக் குகை மனிதன் குகைகளிற் சீவிக்கும் மிருகங்களுடன் சீவிப்பானுயினும் சிறிது முன்னேற்றமுடையவனுகக் காணப்பட்டான். யாழியானை மனிதன் (Mammoth man) தீத்தட்டிக்கல்லை உபயோகப் படுத்தவுந் தெரிந்துகொண்டானுயினன்.

இரண்டாவது பனிக்காலத்தில் மான்கள் (Rain deer) அனேகமாகக் காணப்பட்டன. அக்காலத்து மனிதன் ஈட்டி, கைவேல், மண்டா, வல்லையம், எறியீட்டி போன்ற ஆயுதங்களைச் செய்யவும், அவற்றை உபயோகிக்கவும் அறிந்தவனுனன். சமூக வாழ்க்கை அதி

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

மிருகங்களும் பறவைகளும்: 10

## கொக்கு



மே 523 நா. சோமசுந்தரன்

கொக்கு பால்போல வெள்ளையாக இருந்தாலும் அவ்வளவு அழகான பறவையென்று கூறமுடியாது. நீண்ட மெல்லிய கால்கள். கனமில்லாத உடல். நீளமான கூரிய சொண்டு. சிறிய கண்கள். இவை கொக்கைப்பற்றிய சிறு வர்ணனை.

கோடை காலங்களிற் கொக்குகள் யாழ்ப்பாணப் பகுதியில் அதிகமாகக் காணப்படுவதில்லை. கொக்குகளை மாரிகாலங்களிலே தான மிகுதியாகக் கழனிகளிலே காணலாம். வயல்களிலுள்ள மீன்—தவளை—நண்டு என்பனவற்றைக் குறிவைத்தபடி வரம்புகளிற் குந்தியிருக்கும். சந்தர்ப்பம் சரியாக வந்ததும் 'லபக்' கென்று கௌவிக்கொண்டு பறந்துவிடும்.

கொக்குப் பண்டுதொட்டே தமிழ் நாட்டில் வசித்து வருகின்றது. பழந்தமிழ்க் காவியங்களிலும்—சங்கச் செய்யுள்களிலும்— கொக்கைப்பற்றிப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

கொக்கிடமிருந்து நாம் அறிந்துகொள்ளக் கூடியது என்னவென்றால் 'அடக்கமுடையா ரறிவிலரென்றெண்ணக் கூடாது' என்பதாம். சில மாணவர்கள் அடக்க ஒடுக்கமாக—ஆடி ஓடித் திரியாது— பதுங்கிக்கொண்டு —இருப்பார்கள். மற்றவர்கள் அவரை ஒருமாதிரி 'மக்கு' என்றெண்ணி விடுவார்கள். அப்பப்பா! அவர்கள் சந்தர்ப்பம் வந்ததுஞ் சாதிக்குஞ் செயல்களைக் கண்டால் திகைக்க வேண்டியதுதான்.

அவர்களைப் போலத்தான் கொக்கும் ஆற்ருேரங்களிலே சோர்ந்தவர்கள் போல் வாடிக்கொண்டிருக்கும். சிறுமீன்கள் ஓடிக்கொண் டிருக்கும்போது கொக்கு ஆத்திரப்படுவதில்லை. கிடையாமற் போய்விடுமேயென்று அச்சப்படுவதில்லை. அடக்கமாக அமர்ந்திருக்கும் அறிந்தும் அறியாததுபோல். ஆனல்......பெரிய மீன் வந்ததும் அப்படியே கௌவிக் கொள்ளும்.

கொக்கைப்போல் தருணம் வந்ததும் சாதிப்பவர்கள் இவ்வுலகிற் பலர் இருக்கின்றனர்.

### நத்தை

நத்தைக்கு 1000 பல். வாசனை அறியும் சக்தி மிகுந்தது. 9 அடி உயரத்தில் உள்ள பொருள்களைக் கூட அது மோப்பம் பிடித்துவிடும். கால் அங்குல தூரத்துக்கு அப்பால் உள்ள எதுவும் அதன் கண்ணுக்குத் தெரியாது. அதற்கு நீண்ட ஆயுள். ஒரே நத்தை அடிக்கடி ஆணுகவும் பெண்ணுகவும் மாறிக் கொண்டே இருக்கிறது. மணிஒன்றுக்கு ·000363005 மைல், அதாவது வருடம் ஒன்றுக்கு 80 மைல் விகித வேகத்தில், அது ஊர்கிறது.

மூன்றடி நீளமுள்ள நத்தை பிரிட்டனில்உளதென்று தெரிகின்றது.

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்: ........................................................

விலாசம்: ........................................................

........................................................

........................................................

நந்ததிகதி: ................................

........................................................
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 7967

கொக்குவில் கிழக்கு,
வயிரமுத்து சின்னத்தம்பி
வழக்காளி

கொக்குவில் கிழக்கு,
1. பொன்னம்பலம் சின்னத்தம்பி
2. பெண் சரஸ்வதி
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7967-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு ஏப்றில் (சித்திரை) மாதம் 9-ந் திகதி (9-4-52) புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**— முதல் வட்டி ரூபாய் 1448-16-ம் இதில் ரூபாய் 1000/-க்கு 12-7-51 திகதி தொடக்கம் 11-10-51 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 219-54 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்றுக் கொக்குவிலிறை "வன்னியன்சீமா" நிலப்பரப்பு $4\frac{1}{16}$-ம் புதிதாகக் கட்டின வீடும், செய்பயிர்களும், வடமேற்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் மேற்கெல்லைக் காணியின் வடக்கெல்லை யருகாக வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். எல்லை: கிழக்கு, வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு, சிவசம்பு கைம்பெண் தங்கத்தின் ஆதனம். மேற்கு, பொன்னையா பெண் பொன்னம்மாவின் ஆதனம். தெற்கு, கை ஒழுங்கை. இதடங்கலும். முற்பதிவு D 188/221.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 16-2-1952
[4557]

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை :**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு :**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம் :**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள் :**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன் :**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4537]

The
# EeLAKESARI
T'Phone No. 805
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, March 16, 1952 | No 35

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

## பழமொழி இலக்கியம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தைக் காணுகிறோம். படித்தவர்களுக்குமட்டுமன்றிப் படிக்காதவர்களுக்குந்தான் இந்த முறை மிகவும் பயன்படுகிறது.

வியாபார மந்தத்தினாலே தனது செலவைக் கைவிட்ட ஓர் ஏழைத் தொழிலாளி வறுமைக் கொடுமையாற் பிச்சை எடுக்க முயன்று, பழக்கக் குறைவினால் அதிகம் பலனடையாமல், குரங்காட்டிப் பிழைக்குந் தொழிலை மேற்கொண்டு, கவனக் குறைவினால் அக்குரங்கையும் இறக்கவிட்டு ஊர்ச்சனங்களின் 'பஞ்சத்திலாண்டியா? பரம்பரையாண்டியா' என்ற பழிப்புரைக்கு இலக்கானான் என்று ஒரு கதையைப் பத்திரிகை ஒன்றிற்படித்த ஞாபகம். அந்தப் 'பஞ்சத்திலாண்டிபோன்று' அநுபவக் குறைவான காரியங்களில் ஈடுபட்டு அசட்டுப்பட்டம் வாங்குவோர் சமூகத்திற் பலருண்டு.

தம்மை மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்பதற்காகப் போலிப்பகட்டு வாழ்க்கை நடத்துவோர் 'குடிப்பது கூழ் கொப்புளிப்பது பன்னீர்' 'பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை' 'ஊரோச்சம் வீடு பட்டினி' 'தாய் ஊரிற் பிச்சை எடுக்கிறான், மகன் கும்பகோணத்தில் கோதானஞ் செய்கிறான்' என்பதுபோன்ற பழமொழிகளுக்கு இலக்காவர்.

சுயநலங்காரணமாகப் பிறருக்குக் கெடுதிகள் செய்து துன்புறுவோரைப் பார்க்கும்போது 'தினை விதைத்தவன் தினையறுப்பான்; வினை விதைத்தவன் வினையறுப்பான்' 'பிறர்க்கிடு பள்ளம் தான்விழு பள்ளம்' 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' 'கெடுவான் கேடு நினைப்பான்' 'தான் நினைக்குங் கேடு தனக்கு' என்பனபோன்ற பழமொழிகளுக்கு இலக்காவர்.

'நுங்குண்டார் போகக் கோம்பை நக்கினார்க்கா தெண்டம்' 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல்'... என யாழ்ப்பாணத்தில் வழங்குவன முறையே 'குரும்பை குடித்தவன் போகக் கோம்பை நக்கினவன் குட்டுப்பட்டான்' 'மரத்தால் விழுந்தவனை எருமை முட்டித் தள்ளியதுபோல்' எனத் தென்னிலங்கையில் மாறி வழங்கும். 'நாய் காணின் கற்காணேன்; கற்காணின் நாய்காணேன்' என்ற தமிழ்ப்பழமொழியின் சாயல். 'கூழ் இருந்தால் உப்பில்லை; உப்பிருந்தால் கூழில்லை' என்று சுமேரியப் பழமொழியில் இருப்பதாகத் தெரியவருகிறது—இவையெல்லாம் சூழலுக்கேற்ப உண்டாகும் மாற்றங்கள்.

பழமொழி இலக்கியம் என்ற 'இப்பரந்த விஷயத்தை' 'ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு' என்ற வகையில் பதம் பார்த்தோம். இந்த வகையில் இன்னும் ஆராய்ச்சி செய்தால் அதிக பலன் கிட்டும்.

## நமது வாசிகசாலை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யுடையன என்று ஒருவரும் கருதலாகாது.

செய்யுள்களுக்குக் கொடுக்கின்ற விளக்கமும், சொல்லும் நடையும், கொண்டுபோகிற பாணியும் பனைமரத்திற்குக் கூட விளங்கும். படிப்பவனுக்குத் தெரியாமலே பாட்டை விளங்கப்படுத்தி விடுகிறார். நீந்தத் தெரியாதென்று சொன்னவனைத் தந்திரமாகக் கூட்டிக்கொண்டுபோய் நடுக்கடலில் விட்டமாதிரி, இந்நூலைப் படிப்பவர் குறுந்தொகையைப் படித்துத்தான் தீரவேண்டும். நீந்தித்தான் கரையை அடையவேண்டும்.

விளக்கம் கூடிவிட்டது என்று யாரும் சொன்னாலும் சொல்வார்களேயன்றிக் காணாது என்று எவரும் கூறமாட்டார்கள். அவ்வளவு பொறுமை.

ஏழு செய்யுளிற்கும் ஏழு தலையங்கம் கொடுக்கிறார். 'சேவலங் கொடியோன்', 'கூந்தல் மணம்' 'குறிஞ்சித் தேன்' 'அருளும் அன்பும்' 'கொன்றைக் கானம்' 'அகவல்மகன்' 'அணில் ஆடும் முன்றில்' என்பன. அதில் குறிஞ்சித்தேன் என்பதையே இந்நூலின் பெயராகவும் வைக்கிறார். 'நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;' என்ற செய்யுளை விளக்குவது. இச்செய்யுளின் விளக்கம் மிகவும் திறமையாக அமைந்திருக்கின்றது. காதலின் உயர்ந்த தத்துவத்தை நன்றாக விளக்குகிறார். தெவிட்டத் தெவிட்டச் சொல்லுகிறார்.

சங்ககாலப் புலவர்களின் செய்யுள்கள் இயற்கையை அப்படியே சொல்வன. உவமைகளையும் இயற்கைப் பொருள்களிலேயே வைத்துக் கூறுவார்கள். செய்கைப் பொருள்களையோ கற்பனை உவமைகளையோ சங்கச் செய்யுள்களிற் காண்பதரிது. நாளாந்தம் காண்கின்ற இயற்கைப்பொருள்களை அருமையான உவமைகளாகக் கையாண்டிருக்கிறார்கள். இவ்வித அற்புத உவமைகளைக் கையாண்ட சில புலவர்களுக்கு அவ்வுவமைகளைக் கூறும் செய்யுட்தொடரே பட்டப்பெயராக அமைய நாளடைவில் அவர்கள் சொந்தப்பெயர் மறைந்துவிட்டது. 'தேய்புரிபழங் கயிறனார்', 'தொடித்தலை விழுத்தண்டினார்', 'அணில் ஆடுமுன்றிலார்' என்பவர்கள் இவ்வகையினாற் பெயர் பெற்ற சிலராவர். இதிலிருந்து இவ்வுவமைகளைத் தமிழர் நன்கு இரசித்தனர் என்பது புலனாகிறது.

சாதாரணமாகக் கிராமங்களில் ஆடவர், பெண்டிர், பிள்ளைகள் எல்லோரும் தொழில்முகமாகக் கமத்திற்குச் செல்ல வீடு வெறிச்சென்றிருக்கும். முற்றத்தில் அணில் அங்கும் இங்கும் ஓடியாடித்திரியும். இது நாம் சாதாரணமாகக் கிராமங்களிற் காணுங் காட்சி. இப்படி ஆளின்றிப் பொலிவிழந்து அணில் ஆடும் முன்றில் போலத் தலைவன் இல்லாத காலத்தில் அவள் மனம் பொலிவிழந்து வருந்தியது என்று சொல்ல முடியாத ஒரு மன நிகழ்ச்சியைச் சாதாரணமான எளிய உவமையில் வைத்துச் சொன்னதனால், 'அணில் ஆடும் முன்றிலார்' என அப்புலவர் பெயர் பெற்றார்.

இங்ஙனம் இயற்கையான ஒரு உதாரணத்தை, ஆசிரியர், 'ஒருமனிதரில்லை. மக்கள் யாவரும் ஊரைவிட்டுப் போய்விட்டார்கள். கண்ணுக்கு எட்டியதூரம் வரைக்கும் நீரும் நிழலும் இல்லாத பாலைவனமாகிவிட்டது அந்தப்பகுதி. அங்கே மக்கள் எப்படி வாழமுடியும்? வீடுகள் குட்டிச்சுவர்களாக நின்றன. வீட்டு முற்றங்களில் அன்று சின்னஞ் சிறு குழந்தைகள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இன்றோ அணில் ஓடியது. அதற்கு அங்கே என்ன கிடைக்கப்போகிறது. அங்கு வாழ்ந்திருந்த மக்கள் என்ன ஆனார்களோ? என்ன என்ன துன்பப்பட்டார்களோ? பலகாலம் வாழ்ந்திருந்த இடத்தைவிட்டுப் போவதென்பது எளிதா? அந்த அருவழியாகிய அத்தத்தில் நண்ணிய சீறூர். முன்பு அழகிய குடிகளுடன் இருந்த ஊர். இப்போது வெறும் மயானமாக இருந்தது. அணில் ஆடும் முன்றில்இருந்தது.' இங்ஙனம் விளக்குகிறார் ஆசிரியர். அன்னாரின் கற்பனை போற்றற்பாலதே. நூல் கவர்ச்சிகரமாக அமைந்துள்ளது. —க. சி.

## உயிர்வர்க்கங்களின் உற்பத்தி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கரித்ததுடன் கூட்டங்களாக நிலவறைகளிற் சீவிக்கவுங் காணப்பட்டான். உடை தரித்துக்கொள்வதுடன் நெருப்பின் உபயோகத்தையும் அறியலானான். பனிக்காலம் அற்றுப் போகவே இக்கால மனிதனும் மானும் வடக்குநோக்கிச்செல்லும்பனியுடன்செல்வாராயினர்.

நியோலிதிக் (Neolithic) உபகாலத்தில் தென் ஐரோப்பாவில் சீவித்த சீர்திருந்திய மானிடர் வடபாகங்களிற் குடியேறுவாராயினர். இந்நியோலிதிக்மனிதன் (Neolithicman) குகைகளிலாவது நிலவறைகளிலாவது சீவிக்க விரும்பவில்லை. ஆடு மாடு வளர்ப்பதுடன் சிறு கமத்தொழிலையுஞ் செய்வானாயினான். தைக்கப்பட்ட தோல்களைக் கொண்டு வீடு கட்டி நிரந்தரமான வாழ்க்கையை நடத்துவானாயினான். உதவியின் பொருட்டும், பாதுகாப்பின் பொருட்டுமாகத் தனிக் குடும்பமாக வாழ்வதுடன் சமூக வாழ்க்கையையும் விரும்புவானாயினான். அவன் நல்ல தேக அமைப்பும், சாதாரண உயரமும் உடையவனாகத் தோற்றப்பட்டான். அவனது நெற்றியும் தாடைகளும் பற்களும் அழகாகக் காணப்பட்டதுடன் அவன் விவேகமுள்ளவனென்பதையும் அறியத்தக்க தேக அமைப்பையுடையவனாகக் காணப்பட்டான். அம்பையும் வில்லையும் உபயோகிக்கத்தக்க வல்லமையுடையவனாயினான். பிற்காலத்திற் கட்டப்பட்ட வீடுகளும், கல்லறைகளும் அவனின்விவேக ஆற்றலையறியத்தக்கதாகும்.




துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 169-X54 TM

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில 1952-ம் ஆண்டு மார்ச் மீ 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது